# வானவில்

**VAANAVIL**

இதழ் 139 | ஆடி 2022

ISSUE 139 | JULY 2022


# இலங்கையில் ஜனநாயகத்துக்கு சவக்குழி தோண்டப்பட்டுள்ளது!




**இ**லங்கையின் புதிய ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்றிருக்கிறார்.

இதுவரை காலமும் பதவி வகித்த இலங்கையின் ஜனாதிபதிகள் (டி.பி.விஜேயதுங்கவைத் தவிர) மக்களின் நேரடி வாக்களிப்பின் மூலமே ஜனாதிபதியாகத் தெரிவாகி வந்த சூழ்நிலையில் ரணில் வேறு வழியில் ஜனாதிபதியாகி இருக்கிறார்.

அவர் யூலை 20 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் மத்தியில் நடத்திய வாக்கெடுப்பில் அதிகப்படியான (134) வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவாகி இருக்கிறார்.

எதிர்ப்புக் கிளர்ச்சிகள் காரணமாக ஜனதிபதி பதவியைத் துறந்ததுடன், நாட்டையும் விட்டு வெளியேறிச் சென்றுள்ள கோத்தபாய ராஜபக்சவின் எஞ்சிய பதவி காலம் (2024 வரை) முழுவதும் ரணில் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார். (சில வேளைகளில் கோத்தாவுக்கு எதிராக எழுந்தது போன்ற எதிர்ப்புகள் போன்று ரணிலுக்கும் ஏற்பட்டு, அதனால் ரணிலும் இடை நடுவில் பதவி விலகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை)

ரணில் ஜனாதிபதியான விடயம் மிகவும் சுவாரசியமிக்கதும் எதிர்பாராததுமாகும். (ரணில் கூட சில வேளைகளில் தனக்கு இவ்வாறு ஒரு அதிர்ஸ்டம் வரும் என எதிர்பார்க்காமல் இருந்திருக்கலாம்) வரலாற்றைச் சற்று பின்னோக்கிப் பார்ப்பது இந்தச் சூழலில் பயனுள்ளது.

ரணிலின் தலைமைத்துவ ஆற்றலின்மையால் ஐ.தே.க. தேர்தல்களில் தொடர் தோல்விகளைச் சந்தித்த போது கட்சிக்குள் முரண்பாடுகள் தோன்றி கோஸ்டி மோதல்கள் உருவாகின. கட்சி காப்பாற்றப்பட வேண்டுமானால் ரணில் தலைமைப் பதவியில் இருந்து விலகி கூடுதலான உறுப்பினர்கள் விரும்பும் ஒருவரிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என கட்சியின் மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை பலரும் வலியுறுத்தினர்.

ஆனால் ரணில் பதவி விலக பிடிவாதமாக மறுத்ததால் கட்சி பிளவுபட்டது. பெரும்பாலான கட்சி உறுப்பினர்கள் கட்சியின் பிரதி தலைவராக இருந்த சஜித் பிரேமதாச தலைமையில் பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை உருவாக்கி செயல்பட ஆரம்பித்தனர். அந்தக் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் 50 இற்கும் அதிகமான ஆசனங்களை வென்று நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியாகவும் பதவி வகிக்கின்றது. அதன் தலைவர் சஜித் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றார்.

மறுபக்கத்தில், ரணில் தலைமையிலான ஐ.தே.க. கடந்த பொதுத் தேர்தலில் ஒரு உறுப்பிரைக் கூடப் பெற முடியவில்லை. ஆனால் ரணிலின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த போது 1978 இல் அறிமுகப்படுத்திய புதிய அரசியல் சட்டம் மற்றும் விகிதாசாரத் தேர்தல் முறை காரணமாக பொதுத்தேர்தலில் ஐ.தே.க. கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில் ரணிலுக்கு மட்டும் கட்சி சார்பாக தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி கிடைத்தது. அதன்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# ‘அரகலயா’வின் நிகழ்ச்சி நிரல் இன்னும் முற்றுப்பெறவில்லை

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை வீட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று கடந்த மார்ச் மாதம் காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட ‘அரகலயா’ (Aragalaya - போராட்டம் என்று பொருள்), ஜுலை 14ம் திகதி கோட்டபாய பதவியைத் துறந்த பின்னரும் முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. ‘அரகலயா’வின் நோக்கம் வெறுமனே தற்போதைய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதோடு நின்றுவிடாது, தாங்கள் அதிகாரத்திற்கும் வரவேண்டுமென்பதாகவே இருக்க முடியும். ஆனால் அவர்களின் ஆர்ப்பாட்டம், தற்போது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசொன்றினை நிறுவுவதிலேயே கொண்டு வந்து விட்டிருக்கின்றது.

அதனால் தாங்கள் அதிகாரத்திற்கு வரும் வரை ‘அரகலயா’வைக் கைவிடமாட்டார்கள் போல் தெரிகிறது. ‘அரகலயா’வில் ஜே.வி.பி மற்றும் முன்னிலை சோசலிசக்கட்சி உட்பட பலவிதமான குழுக்கள் இணைந்துள்ளதாகத் தெரிகின்றது. ஜே.வி.பிக்கு பாராளுமன்றத்தில் மூன்று ஆசனங்கள் மாத்திரமே உள்ளன. எனவே தற்போதைய நிலையில் ‘அரகலயா’ சார்பில் ஜே.வி.பி அதிகாரத்திற்கு வர முடியாது. ஆகவே புதிய தேர்தலொன்றினை நடத்தக்கோரி அவர்கள் போரட வேண்டித் தள்ளப்படலாம். புதிய தேர்தலொன்றின் முடிவுகள் அவர்களை அரியாசனத்தில் ஏற்றப்போவதில்லை என்பதை இப்போதே திட்டவட்டமாகக் கூற முடியும். அப்படியானால் ‘அரகலயா’வின் முடிவு எப்படியாக அமையப்போகின்றது?

ஜுலை 21ம் திகதி புதிய ஜனாதிபதியாப் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க, அன்றிரவே காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடிக்குமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய ஜுலை 22ம் திகதி அதிகாலையில் பாதுகாப்பு படையினர் வன்முறையைப் பிரயோகித்து ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடித்துள்ளனர். கோட்டபாயவினால் கூட செய்ய முடியாமல் போன காரியத்தை, ரணிலால் எப்படி துணிந்து செய்ய முடிந்ததென்ற கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. எனினும் இந்த நடவடிக்கையைக் கண்டித்தவர்கள், அமெரிக்கத் தூதரகம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையம் மாத்திரமே என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதேவேளையில் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் முன்னாள் தலைவர் டியு குணசேகரா, இலங்கை அமெரிக்கத் தூதரகத்திற்கு தெரியாமல் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்திருக்க வாய்ப்பில்லையென்று தெரிவித்திருக்கிறார்.

சீனாவின் ‘கடன்பொறி’யே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமென்று மேற்கத்தைய ஊடகங்கள் நீண்டகாலமாக கூறிவருகின்றன. கடந்த நான்கு மாதகாலமாக CNN, BBC, Al JAZEERA போன்ற உலகின் பிரமாண்டமான கோர்ப்பரேட் ஊடகங்களிலிருந்து சிறிய ஊடகங்கள் வரை, இலங்கையின் பொருளாதார, அரசியல் நெருக்கடி பற்றிய செய்திகளை நாளாந்தம் தொடர்ச்சியாக ஒளிபரப்பி வருகின்றன. இந்த ஊடகங்கள் சீனாவின் கடன்பொறியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியே காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்திற்கு வழிவகுத்ததெனவும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் பிரச்சாரங்களை முன்னெடுத்துள்ளன. எனினும், இலங்கைக்கு வெளியே உள்ள சில ஊடகவியலாளர்கள் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் ‘அரகலயா’வின் பின்னணி பற்றி அலசி ஆராயத் தொடங்கியுள்ளார்கள். இவர்களில் சேணாலி வடுகே, பிரைன் பேர்ல்ரிக், பென் நோர்ட்டன் (Shenali Waduge, Brian Berltic, Ben Norton) போன்றவர்கள் மிகவும் முக்கியமானவர்கள்.

அமெரிக்காவின் நிதியுதவி வழங்கும் நிறுவனங்களான USAID, NED (National Endowment for Democracy) போன்றன உலகின் பல நாடுகளில் ஆர்பாட்டங்கள் மூலமாக அரசைக் கவிழ்ப்பதற்கு பணங்களை வாரியிறைத்துள்ளன. இந்த இரு நிறுவனங்களும் இலங்கையிலும் நீண்டகாலமாகவே தமது கைங்கரியங்களை நிறைவேற்றுவதில் குறியாக இருந்து வருவதாக ஆதாரங்களுடன் சேணாலி வடுகே கட்டுரையொன்றில் விரிவாக எழுதியுள்ளார். இலங்கைக்கான கடனில் சீனாவின் பங்கு 10 வீதம் மாத்திரமே, அமெரிக்க, ஐரோப்பிய நிறுவனங்களிடமிருந்தே 50 வீதமளவிலான பிணைமுறிக் கடன்களை இலங்கை வாங்கியுள்ளது, எனவே சீனாவின் ‘கடன்பொறி’யில் இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதென கூறுவது முற்றிலும் தவறென பிரைன் பேர்ல்ரிக்கும் பென் நோர்ட்டனும் தெரிவித்துள்ளார்கள். மேலும் பிரைன் பேர்ல்ரிக், ‘அரகலயா’வின் பின்னணியில் அமெரிக்காவின் கரங்கள் பதிந்திருப்பதாக, ஜுலை 12ம் திகதி ரோய்ட்டர் செய்தியொன்றை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

‘அரகலயா’வின் முன்னணி செயற்பாட்டாளர்களாகக் கருதப்படும் ‘ரட்டா’ என அழைக்கப்படும் ரத்திது சேனாரத்ன, திலான் சேனாநாயக்க மற்றும் அவிஷ்க விராஜ் கோனார ஆகியோரின் வங்கிக்கணக்குகளில் வெளிநாடுகளிலிருந்து 45 மில்லியன் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளதென்ற செய்தியொன்று ஜுலை 18ம் திகதி இலங்கையின் பல ஊடகங்களில் வெளிவந்தது. அச்செய்தியில், ‘பணம் வைப்பிலிடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே மூவரும் இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் மூன்று புதிய கணக்குகளை ஆரம்பித்துள்ளனர். பணம் வைப்பிலிடப்பட்டு சில மணிநேரங்களுக்குப் பின்னர், வங்கிக்கு வந்த மூவரும் முழுத் தொகையையும் மீளப் பெற்றதாகவும், பணத்தைப் பெற்றதற்கான காரணத்தை விசாரித்த வங்கி அதிகாரிகளை மிரட்டியுள்ளனர்’ என மேலும் கூறப்பட்டுள்ளது.

‘அரகலயா’விற்கு பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டு வருகின்றது. இந்தப்பணம் எங்கிருந்து வருகின்றதென்ற கேள்வி சாதாரணமாக எழுவது தவிர்க்க முடியாதது. அதேபோன்று இலங்கையின் புதிய அமெரிக்க தூதுவராக ஜுலி சங் (Julie Chung) கடந்த பெப்ரவரி மாதம் நியமிக்கப்பட்டதும், குறுகிய காலத்தில் அவரின் நாட்டு தழுவிய சந்திப்புகளும், அறிக்கைகளும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள். இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை, இலங்கையர்களை விட அந்நியர்களே அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதே உண்மை.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*


# சர்வதேச நாணய நிதியத்துடன் இன்னமும் உடன்படிக்கை கையெழுத்தாகவில்லை!

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை கடன் பளு நிவாரணம் சம்பந்தமாக ஆரம்ப கட்ட உடன்பாடு எதனையும் கூட இன்னமும் எட்டவில்லை எனத் தெரிவித்திருக்கும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் டாக்டர் பாலித கோகொன, இலங்கையின் இரண்டு பெரிய கடன் வழங்குநர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

சீனாவிலிருந்து வெளிவரும் 'குளோபல் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்திருக்கும் சிறப்புப் பேட்டியிலேயே கோகொன இதைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில், கடன் சுமை காரணமாக இலங்கை தன்னை ஒரு வங்குரோத்து நாடாக அறிவித்திருப்பதுடன், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக எழுந்த கிளர்ச்சியை சமாளிக்க அவசரகால நிலையையும் பிரகடனப்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் கடந்த மாத இறுதிப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, நிலைமையை ஆராய்ந்ததுடன், அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டது. அதைத் தொடர்ந்து நாம் லண்டனில் உள்ள மேற்குலகின் கடன் மீளமைப்பு பற்றிய நிபுணத்துவம் கொண்ட சட்ட வல்லுனர்களைக் கொண்ட குழுவொன்றை அமைத்துள்ளோம். ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடனான எமது பேச்சுவார்த்தைகள் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. நாட்டில் புதிய அரசாங்கம் ஒன்று ஏற்பட்ட பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கான ஒழுங்கு மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், நாணய நிதியம் முன்வைக்கும் திட்டத்தில் உள்ள நிபந்தனைகள் மிகவும் பாரதூரமானவையாக இருக்கும் எனத் தாம் கருதவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




சர்வதேச நாணய நிதியம் வரும்போது தவிர்க்க முடியாமல் எமது இடுப்புப் பட்டியை இறுக்க வேண்டி வரலாம். ஆனால் சில விடயங்களைப் பொறுத்தவரையில் நாம் எமது இடுப்புப் பட்டியை ஏற்கெனவே முழுவதுமாக இறுக்கி விட்டோம் என்பதுதான் நிலைமை. எமது நாட்டில் அரசாங்க உதவியுடன் செயல்படுத்தப்படும் மருத்துவ முறைமையை நிறுத்தும்படி நாணய நிதியம் நிர்ப்பந்திக்கலாம் என்ற அச்சம் எமக்கு இருக்கிறது. அத்துடன், எமது நாட்டில் முதலாம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழக கல்வி வரை இருக்கும் இலவசக் கல்வியை நிறுத்தும்படியும் அவர்கள் கூறக்கூடும். அப்படிச் செய்தால் நாட்டில் அமைதியின்மை மேலும் அதிகரிக்கும்.

இலங்கைக்கு அதிகளவு கடன் வழங்கியுள்ளவர்கள் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற மேற்கத்தைய முதலீட்டாளர்களே. நாட்டின் நெருக்கடியைத் தீர்ப்பதில் இவர்களே முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

சீனாவையும் யப்பானையும் பொறுத்த வரை இரண்டு நாடுகளும் இலங்கைக்கு வழங்கியுள்ள கடன் தொகை மொத்தத் தொகையில் தலா 10 சத வீதம் மட்டுமே. அதாவது இலங்கையின் தற்போதைய 7 பில்லியன் டொலர் கடன் தொகையில் இவர்களது தொகை 1 பில்லியன் மட்டுமே.

இதற்கிடையில், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை பற்றி அண்மையில் கருத்து வெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் வாங் வென்பின், இலங்கை தான் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதை நிறுத்துவதாக அறிவித்த பின்னர் சீன நிதி நிறுவனங்கள் இலங்கையை அணுகி முதிர்வடைந்த கடன்களை மீளச் செலுத்தும்படி கேட்டுக் கொண்டதுடன், இலங்கை தனது நெருக்கடிகளில் இருந்த மீள்வதற்கு சீனா தொடர்ந்தும் தன்னாலான உதவிகளை வழங்கும் எனத் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.

சீனா அண்மையில் 500 மில்லியன் யுவான் (74 மில்லியன் டொலர்) பெறுமதியான அவசரகால மனிதாபிமான உதவியை இலங்கைக்கு வழங்கியது. அத்துடன், இரண்டாவது கட்ட அவசர மனிதாபிமான உதவியாக 1,000 தொன் அரிசியையும் வழங்கியுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலை பற்றிக் குறிப்பிட்ட சீனாவுக்கான இலங்கைத்

தூதுவர் பாலித கோகொன, சமையல் எரிவாயு, உரம், மருந்து, உணவுப் பொருட்கள் என்பனவற்றின் தட்டுப்பாட்டால் இலங்கையர்களின் அடிப்படைத் தேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதால் அரசாங்கம் பெரும் சவாலை எதிர் நோக்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பதவி விலகி, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்துள்ளார். ரணில் பதில் ஜனாதிபதி ஆனதும் நாடு தழுவிய அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கை தூதுவர், ரணில் எவ்வளவு காலம் பதில் ஜனாதிபதியாகத் தொடர்வார் என்பது தெரியவில்லை எனவும் கூறியிருக்கிறார். "நாட்டின் தலைமை திடீரென கேள்விக்குள்ளாகி இருப்பது திருப்திகரமான விடயமல்ல. நாட்டின் அரசியல் சட்டத்தின் விதிகள் பின்பற்றப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தல்கள் நடைபெற்று புதிய ஒரு ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்" என நம்புகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக இலங்கை நாடாளுமன்றம் யூலை 20 ஆம் திகதி கூடவுள்ளதாகத் தெரிவித்திருக்கும் இலங்கைத் தூதவர், எத்தகைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தாலும் சீனாவுடனான உறவுகள் சிறப்பாகப் பேணப்படும் எனவும் தெரிவித்துள்ளார். "இலங்கையைப் பொறுத்தவரை சீனா ஒரு பிரதான வர்த்தக மற்றும் முதலீட்டுக் கூட்டாளி நாடு ஆகும். எமது இரு நாடுகளுக்கிடையிலும் மூலோபாய நட்பு நிலவுகின்றது. தேர்தலுக்குப் பின்னர் பதவிக்கு வரும் புதிய அரசாங்கமும் வழமைபோல தொடர்ந்தும் சீன அரசுடனும் மக்களுடனும் நட்பைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது."

சீனாவின் உதவியுடன் இலங்கையின் தென் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம் பெருந்தொகையான உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளதுடன், இலங்கைப் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பையும் வழங்கி வருவதாகவும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் தனது பேட்டியின் போது மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தனியார் மயத்தால் விழி பிதுங்கி நிற்கும் மக்கள்: போராட்டக் களமாக மாறிய அமெரிக்க மாகாணம்

அமெரிக்காவின் "அதிகாரபூர்வமற்ற" மாகாணமாகக் கருதப்படும் போர்ட்டோ ரிகோவில் தனியார் நிறுவனத்தால் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம் மற்றும் மின்வெட்டுகளுக்கு எதிராக மக்கள் போராட்டக் களத்தில் குதித்துள்ளனர்.

போர்ட்டோ ரிகோ (Peurto Rico) என்பது கரீபியப் பகுதியில் உள்ள ஒரு தீவுக்கூட்டமாகும். இது வடகிழக்கு கரிபியனில் டொமினிக்கன் குடியரசுக்கு கிழக்கேயும் வேர்ஜின் தீவுகளுக்கு மேற்கேயும் புளோரிடா மாநிலக் கரையில் இருந்து 1,280 மைல்கள் (2,000 கிமீ) தூரத்திலும் அமைந்துள்ளது. சுயாட்சி பெற்ற பகுதி என்றும், அமெரிக்காவின் அதிகாரபூர்வமற்ற மாகாணம் என்றும் அழைக்கப்படும் இந்தப் பகுதியில் சுமார் 45 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் யாருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை கிடையாது. இது போன்ற மேலும் பல தீவுகளுக்கும் வாக்களிக்கும் உரிமை இதுவரையில் கிடைக்கவில்லை.

போர்ட்டோ ரிகோ பகுதியில் கடுமையான மின்வெட்டு நிலவி வருகிறது. இது தொடர்வதால் மக்கள் கடும் அதிருப்திக்கு ஆளானார்கள். மேலும்,




இந்த மின்வெட்டைக் காரணம் காட்டி, மின் கட்டணத்தைப் பெரிய அளவில் உயர்த்தும் முடிவை லுமா (LUMA) மின் நிறுவனம் எடுத்தது. இந்த நிறுவனம்தான் அப்பகுதியில் மின்சாரத்தை விநியோகிப்பதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது. தனியார் நிறுவனத்திற்கு கொடுத்து விட்டால், பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்பது மகாபொய் என்பதற்கு இது ஒரு சான்றாகும் என்று அப்பகுதி மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கடுமையான கட்டண உயர்வு மற்றும் மின்வெட்டு ஆகியவற்றிற்கு எதிராகத் திரளும்படி மக்களுக்கு அறைகூவல் விடுக்கப்பட்டது. பல நகரங்களின் மேயர்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரோடு, ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். மக்களின் கொந்தளிப்பைக் கண்ட போர்ட்டோ ரிகோ ஆளுநர் பெட்ரோ பியர்லுசி (Pedro Pierluisi), தனியார் நிறுவனம் விதித்த புதிய கட்டணத்திற்கு ஒப்புதல் தர மறுத்துவிட்டார். தனது இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி இதைச் செய்துள்ளார்.

அரசின் மின்சக்தி நிறுவனம்தான் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் மின் விநியோகத்தை மேற்கொண்டு வந்தது. அப்போது வரையில் பெரிய அளவில் பிரச்சனைகள் இல்லை. தனியார் நிறுவனமான லுமாவிடம் ஒப்படைத்ததில் இருந்து ஒரே ஆண்டில் ஏழு முறை மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. அதோடு பெரும் அளவில் மின்வெட்டு இருக்கிறது. ஏப்ரல் 2022ல் ஒருமுறை மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அது பல நாட்கள் வரையில் நீடித்தது. சுமார் 15 இலட்சம் மக்கள் மின்சாரம் இன்றி அவதிப்பட்டனர்.

தனியார் நிறுவனத்திற்கு அளித்துள்ள மின் விநியோக உரிமை இரத்து செய்ய வேண்டும் என்றும், மீண்டும் அரசு நிறுவனமே அதை ஏற்று நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. தனியார் மயத்தின் அவலத்தை அம்பலப்படுத்திய அனுபவங்களில் போர்ட்டோ ரிகோவின் மின்துறை நெருக்கடியும் ஒன்றாக உள்ளது என்று அப்பகுதியில் எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டுகிறார்கள்.

# கொலம்பியா இடது வெற்றியும் எதிர்காலமும்

சுதந்திர கொலம்பியாவின் 200 ஆண்டு கால வரலாற்றில் அதிபர் இல்லமான “காசா டி நாரினொ” (Casa de Nariño) மாளிகைக்குள் முதன் முதலாக ஒரு இடதுசாரி அடியெடுத்து வைத்துள்ளார். கொலம்பியா, இலத்தீன் அமெரிக்க பகுதி நாடுகளில் மக்கள் தொகையில் மூன்றாவது பெரிய நாடு ஆகும். இதுவரை எந்த அதிபரும் கண்டிராத வித்தியாசத்தில் – அதாவது ஒரு கோடியே 10 இலட்சம் வாக்குகள் – வெற்றியும் ஈட்டியுள்ளார். இளைஞர்கள் பெரும் ஆதரவைத் தந்துள்ளனர். துணை அதிபர் தேர்தலிலும் முதன் முறையாக ஒரு சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர் ஆப்ரிக்க – கொலம்பிய பெண்மணி (Francia Márquez) அந்த நாட்டின் விளிம்பு நிலை எளிய மக்கள் வாழும் காகா பகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



Gustavo Petro Francia Márquez

### இடது அலையின் இன்னொரு துள்ளல்

பெட்ரோ (Gustavo Petro) வெற்றி பெற்றுள்ள இதே காலத்தில் சிலியில் கேப்ரியல் போரிக், ஹோண்டுராசில் சியோமரா கேஸ்ட்ரோ, பொலிவியாவில் லூயிஸ் ஆர்க், பெருவில் பெட்ரோ கேஸ்டிலோ ஆகிய இடதுசாரிகள் தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளனர். ஏற்கெனவே மெக்சிகோவில் அன்றிஸ் மேனுவல் லோபஸ் ஒபரடார், ஆர்ஜென்டினாவில் ஆல்பர்டோ பெர்னாண்டஸ் வெற்றி பெற்றார்கள். ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பிரேசில் அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா வெற்றி பெறுவார் என்று கணிப்புகள் வந்துள்ளன. இடதுசாரிகளின் இந்த வெற்றிக்கு பின்புலமாக இப் பகுதியில் நிகழ்ந்த கோவிட் மரணங்கள் உள்ளன என்பது முக்கியமான காரணிகளில் ஒன்று. உலக மக்கள் தொகையில் 8 சதவீதத்தை கொண்ட இந்த பகுதியில் உலக கோவிட் மரணங்களில் 30 சதவீதம் நிகழ்ந்துள்ளன. காலத்திற்கும் மறக்கவே இயலாத மோசமான கோவிட் நிர்வாகத்தை இப்பகுதியில் இருந்த வலதுசாரி அரசாங்கங்கள் செய்தன. வலதுசாரி அதிபர் பொல்சனாரோ ஆட்சி உள்ள பிரேசிலில் 7 இலட்சம் மரணங்கள் நிகழ்ந்தன.

### 120 ஆண்டுகள் காணாத நெருக்கடி

பொருளாதார பாதிப்புகளும் முக்கிய காரணம். ஐ.நா. சபையின் இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளுக்கான பொருளாதார ஆணையம் (ECLAC) இந்த பகுதியின் பொருளாதார நெருக்கடியை 120 ஆண்டுகள் காணாத ஒன்று என வர்ணித்தது. 2020 இல் 7 சதவீதம் பொருளாதாரம் சுருங்கியது. உலக ஜி.டி.பி யில் ஏற்பட்ட சுருக்கத்தை போல இது இரு மடங்காகும். இப்போது இப்பகுதி கண்டு வரும் புதிய “இளம் சிவப்பு புரட்சியை” 2000 – 2013 காலத்தில் நடைபெற்ற மாற்றங்கள் உடன் ஒப்பிட முடியுமா என்பது விவாதத்திற்குரியதே. (இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டு நிகழ்ந்த மாற்றங்கள் பின்னர் வடிந்து போயின) முதல் பத்தாண்டு மாற்றங்கள் வளமையை, வறுமைக் குறைப்பை இப்பகுதியில் கொண்டு வந்தன. உலகின் அதிகமான வருமான ஏற்றத்தாழ்வு மிக்க இப்பகுதியில் அந்த முன்னேற்றங்கள் முக்கியமானவையாக இருந்தன. அவை மண்டல ரீதியான பொருளாதார ஒருங்கிணைப்பையும் பலப்படுத்தின. தென்னமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு (UNASUR), அமெரிக்க – கரீபிய நாடுகளின் சமூகம் (CELAC), பசிபிக் கூட்டணி (Pacific Alliance) ஆகியன முக்கியமான முன்னெடுப்புகளாக அமைந்தன. சிலி, கியூபா, வெனிசுவேலா வெளியுறவு அமைச்சர்கள் சீனா, இந்தியாவோடு பேச்சு வார்த்தைகள் கூட நடத்தினர் என்பது இன்று நினைத்து பார்க்கக் கூட முடியாத முன் முயற்சி ஆகும்.

### நிலைக்குமா எழுச்சி?

அதைப் போன்ற இடதுசாரிகளின் ஏற்றம் ஆக இப்போதைய வெற்றிகள் அமையுமா? திரும்பவும் இடதுசாரிகள் வருகை என்பது நடந்திருக்கிறது. ஆனால் எந்த வகையான இடதுசாரிகள்? இந்த முன்னேற்றங்கள் நிலைக்குமா? என்ற கேள்விகளும் உள்ளன. பல வகைகளில் இந்த இடதுசாரிகள் வேறுபட்டவர்கள் ஆக உள்ளனர். அவர்களின் முன்னுரிமைகளும் மாறுபட்டுள்ளன. கொலம்பியா புதிய அதிபர் சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர். அந்த நாடு எண்ணெய், நிலக்கரியை (40 சதவீத ஏற்றுமதி வருவாயை தருபவை) சார்ந்து இருப்பதை மாற்ற முனைபவர். சிலி அதிபர் பூர்வீக குடியினர் நலன், பாலின சமத்துவம் நோக்கிய பயணத்தில் அதிகம் அக்கறை காண்பிப்பவர். அந்த நாட்டில் 10 சதவீதம் பேர் 60 சதவீத வருமானத்தை தம் வசம் வைத்துள்ள ஏற்றத் தாழ்வு உச்சத்தில் இருக்கிற நாடு. ஹொண்டுரசின் கவனம் ஊழலை ஒழிப்பது ஆகும். “உலகின் கலவர நகரம்” என்று அழைக்கப்படும் ஹொண்டுரசின் சான் பெட்ரோ சூலா நகரத்தில் நீண்ட காலம் தொடரும் கலவரத்தை கட்டுப்படுத்துவதும் முன்னுரிமை கொண்டதாக உள்ளது. இப்படி நிறைய, வேறுபட்ட சவால்களை புதிய இடதுசாரி அரசாங்கங்கள் எதிர் கொள்கின்றன.

### ராஸ்கல்களை தூக்கி எறி!

முந்திய முதல் பத்தாண்டில் உலக நிலைமைகள் இடதுசாரிகளுக்கு சாதகமாக இருந்தன. இடதுசாரிகளின் ஆட்சிகளும் பிரேசில், அர்ஜெண்டினா,

பொலிவியா, ஈக்வடார், உருகுவே போன்ற நாடுகளில் நீண்ட காலங்கள் இருந்தன. ஆனால் இப்போதைய வெற்றிகள் வித்தியாசமான சூழலில் பெறப்பட்டுள்ளன. ஆளும் கட்சி மீதான அதிருப்தி அலையே காரணங்களாக இருக்கின்றன. "ராஸ்கல்களை தூக்கி எறிவோம்" என்ற கோபம் வெளிப்பட்டுள்ளது. மறுபுறம், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலை, நிதி போதாமைகள், சிக்கலான உலக சூழல் ஆகியன புதிய அரசுகளின் பாதையை மலர் தூவியதாக வைத்திருக்கவில்லை. கொலம்பியா புதிய அதிபர், பிரேசில் சிலி போன்ற நாடுகளுடன் நெருங்கி பணியாற்றுவோம் என்று அறிவித்து இருந்தாலும் தென் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பின் (UNASUR) தோல்வி தந்த பாடங்களை மறக்க கூடாது.

**என்ன செய்ய வேண்டும்?**

இரண்டாம் பனிப்போர் காலம் தனது அவலட்சண முகத்தை காண்பிக்க முனைவதால், செயலூக்கம் கொண்ட கூட்டுச் சேரா இயக்கம் குறித்த கருத்தாக்கம் விவாத களத்திற்கு வந்திருக்கிறது. நேரு காலத்திய 1950 களின் பக்கங்களை புரட்டலாம் என்றாலும் 21 ஆம் நூற்றாண்டின் கள யதார்த்தங்களுக்கு ஏற்ப அவை பொருத்தப்பட வேண்டும். இது குறித்த கல்வி, கொள்கை உருவாக்க வட்டங்களில் நடைபெறுகிற விவாதங்கள் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வெளியுறவு கொள்கைகளின் மீது வெளிச்சம் பாய்ச்சக் கூடும். உலக அரங்கில் இலத்தீன் அமெரிக்க நாடுகள் தங்களின் இடத்தை, தாக்கத்தை உறுதி செய்ய முடியும்.

# உலக அகதிகளின் தொகை 100 மில்லியனைத் தாண்டியது!

உலக அகதிகள் தினத்தை ஒட்டி அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையரகம் வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி, தற்போது உலகில் பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழும் மக்களின் தொகை 100 மில்லியனைக் தாண்டியுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஐ.நா. நிறுவன அறிக்கையின்படி, கடந்த மே மாதத்திலேயே உலக அகதிகளின் எண்ணிக்கை 100 மில்லியனை எட்டி விட்டது. ரஸ்ய – உக்ரைன் மோதல் ஆரம்பித்த 10 மாதங்களில் உலகளாவிய உணவு மற்றும் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. பெப்ரவரி மாதத்தின் பின்னர் சுமார் 8 மில்லியன் உக்ரைன் மக்கள் அகதிகளாகி விட்டார்கள். இவர்களில் 6.5 மில்லியன் வரையிலான மக்கள் எல்லை தாண்டி அயல் நாடுகளான போலந்து மற்றும் மோல்டோவா என்பவற்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

23 நாடுகளைச் சேர்ந்த சுமார் 850 மில்லியன் மக்கள் நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாக உலக வங்கியின் தகவல் கூறுகிறது. கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி, சிரியாவிலேயே அதிகளவிலான அகதிகள் உள்ளனர். அதற்கு அடுத்ததாக வெனிசூலா இரண்டாம் இடத்திலும், ஆப்கானிஸ்தான் மூன்றாம் இடத்திலும் இருக்கின்றன.

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் போரை ஆரம்பித்த பின்னர், மேற்காசியாவிலும், வட ஆபிரிக்காவிலும் உள்ள நாடுகளில் உள்ள அரச எதிர்ப்புச் சக்திகள் மூலம் "அரபு வசந்தம்" என்ற திட்டம் ஊக்குவிக்கப்பட்டது. ஏகாதிபத்திய சக்திகள் சிரியாவில் நேரடித் தலையீட்டை மேற்கொண்டதுடன், வெனிசூலாவின் உள் விவகாரங்களில் நீண்ட காலத் தலையீட்டையும் மேற்கொண்டு வருகின்றன.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக சக்திகள் பல்வேறு நாடுகளில் தமது ஆதிக்க நோக்கத்துக்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாகவே உலகின் பல பாகங்களில் அகதிகளின் தொகை அதிகரித்து வருவதாக அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். ஐரோப்பிய நாடுகளின் ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டணியான நேட்டோ அமெரிக்க ஆதரவுடன் ரஸ்யாவின் எல்லையை நோக்கி நகரத் தொடங்கியதன் காரணமாகவே ரஸ்ய – உக்ரைன் மோதல் ஆரம்பமாகி உக்ரைனிலும் பல மில்லியன் மக்கள் உருவான நிலைமை ஒரு பிந்திய உதாரணமாகும்.

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மற்றைய நாடுகளில் தலையீடுகள் மேற்கொள்வதைக் கைவிடாத வரை உலகின் அகதிகள் பிரச்சினை ஒருபோதும் தீரப் போவதில்லை என்பதே உண்மையாகும்.

# ஆளும்கட்சி தோல்வி, கம்யூனிஸ்ட் ஆதரவு வேட்பாளர் மேயரானார்!

ஜப்பான் தலைநகரான டோக்கியோ பெரு நகரத்திற்குட்பட்ட சுகினாமியின் மேயர் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். டோக்கியோவின் சுகினாமி நகரத்தின் மேயரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் ஜூன் 19 அன்று நடைபெற்றது. நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றியால் தங்கள் இஷ்டத்திற்கு மக்கள் விரோதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் ஆளும் தாராள ஜனநாயகக் கட்சி மற்றும் அதன் கூட்டாளியான கொமேய் கட்சி ஆகியவற்றிற்கு அதிர்ச்சி வைத்தியம் தர விரும்பிய எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இயங்க முடிவு செய்தன. இதற்கான முன்னெடுப்பை ஜப்பான் கம்யூனிஸ்டு கட்சி மேற்கொண்டது.

இந்த ஒற்றுமையை நடைமுறைப்படுத்திப் பார்ப்பதற்கான வாய்ப்பை சுகினாமி மேயர் தேர்தல் வழங்கியது. பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு ஆதரவளிப்பதென்று ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி, அரசியல்சட்ட ஜனநாயகக் கட்சி, சமூக ஜனநாயக கட்சி மற்றும் ரெய்வா சின்செங்குமி ஆகிய கட்சிகள் முடிவெடுத்தன. மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமான கிஷிமோடோ சடோகோவை வேட்பாளராக நிறுத்தி, அவர் வெற்றிக்காக அனைவரும் இணைந்து பாடுபட முடிவெடுத்தனர்.

எதிர்க்கட்சிகளின் இந்த முயற்சிக்கு மக்களிடம் நல்ல ஆதரவு இருக்கிறது என்று பிரச்சாரத்தின்போது பார்க்க முடிந்தது. மூத்த குடிமக்கள் மற்றும் குழந்தைகளைப் பராமரிக்கும் மையங்களை மூடும் ஆளுங்கட்சியின் முடிவுக்கு எதிராக வாக்களிக்குமாறு

**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

# ‘எங்களைப் போன்றவர்கள் இனிமேல் அரசியல் செய்ய முடியாது’

***- பேராசிரியர் சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினர்***

திங்கள், மே 9, 2022 அன்று நாடு முழுவதும் நடந்த கலவரங்களில் அமைச்சர்கள் மற்றும் 74 பாராளுமன்ற உறுப்பினர்களின் 77 வீடுகள் அழிக்கப்பட்டது, இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு கறுப்பு தினமாக இருக்கும். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட ஒன்பது பேர் தங்கள் உயிர்களை இழந்தனர். தீவைப்புத் தாக்குதல்களில் இன்னும் பலர் தங்கள் சொத்துக்களை இழந்தனர். நாட்டின் அரசியலால் பாதிக்கப்பட்டவர்கள் இன்று விரக்தியடைந்துள்ளனர். அவர்களில் நாட்டிற்கு மிகவும் பயனுள்ளவர்களாக இருக்கக்கூடிய படித்த தொழில் வல்லுநர்கள் உள்ளனர். ஏனைய படித்த நபர்கள் மற்றும் புத்திஜீவிகள் எதிர்காலத்தில் அரசியலுக்குள் பிரவேசிப்பதை இந்த வன்முறை நம்பிகையிழக்கச் செய்துள்ளது.

“நாட்டினை 20 ஆண்டுகள் பின்னோக்கி அழைத்துச் சென்றிருக்கும் வேண்டுமென்றே செய்யப்பட்ட இந்த அழிவின் பின்னணியில், கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, நன்கு கட்டமைக்கப்பட்ட, அரசியல் உள்நோக்கம் கொண்ட கிரிமினல் கும்பல்கள் இருந்துள்ளன. இத்தகைய அடாவடித்தனத்தை எதிர்த்து, ஈடுகொடுக்கக் கூடியவர்கள் மட்டுமே, அடுத்த பாராளுமன்றத்திற்கு போட்டியிடுவதற்கு விடப்பட்டுள்ளனர்”

இவ்வாறு முன்னாள் சுகாதார அமைச்சரும் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சன்ன ஜயசுமன (Prof. Channa Jayasumana) தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், சில ஊடகங்கள் தவறாக செய்தி வெளியிட்டதைப் போல, வன்முறையில் அவரது வீடு அழிக்கப்பட்டது என்பதை அவர் மறுத்து, நகர மையத்தில் அமைந்திருந்த அவரது அநுராதபுரம் அலுவலகமே அழிக்கப்பட்டது என்றார். அவருக்கு அனுராதபுரத்தில் வீடு இல்லை.

“அந்த நேரத்தில் (மே 9th திகதி) நான் கொழும்பில் இருந்தேன், மாலை 4 மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் திட்டமிடப்பட்டிருந்தது. காலிமுகத்திடலில் இடம்பெற்ற சம்பவங்கள் ஆரம்பமானதன் பின்னர் இது இடம்பெற்றது. காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதலானது கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்பதால் நான் ஒருபோதும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை, அதே நாளில் நான் சுகாதார அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். பிரதமரின் ராஜினாமாவைத் தொடர்ந்து, அமைச்சரவைக் கூட்டம் சடுதியாக முடிவடைந்தது. அநுராதபுரத்தில் ஏற்படக்கூடிய வன்முறைகள் குறித்து நான் உடனடியாகவே உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவித்தபோது, 40 இராணுவ வீரர்களை நிலைநிறுத்துவது உட்பட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் எனக்கு உறுதியளித்தனர். இருந்தபோதிலும், அதேநாள் ஏறத்தாள இரவு 8 மணியளவில் தலைக்கவசம் அணிந்த, முகமூடி அணிந்த கும்பல் ஒன்று எனது அனுராதபுர அலுவலகத்தைத் தாக்கியது. அலுவலக சி.சி.டி.வியில் எனது கைத்தொலைபேசி இணைக்கப்பட்டிருந்ததால், நிலைமையை என்னால் நேரடியாக அவதானிக்க முடிந்தது. நான் அங்கே கண்டது, என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒரு தாக்குதல் நடக்கப் போகிறது என்பதை நன்கு அறிந்திருந்தும், பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த இராணுவ அதிகாரிகள் அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்டனர்”

## சுரேகா நில்மினி இலங்ககூன்
**(Sureka Nilmini Illangakoon)**

அநுராதபுரம் மாவட்டத்தில் அந்தக் கும்பல்கள் பல இடங்களைத் தாக்குவதற்கு முன்னர், தனது அலுவலகம்தான் முதலில் தாக்கப்பட்டதாக பேராசிரியர் ஜயசுமன தெரிவித்தார். அவரது அலுவலகம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது.

“எனது அலுவலகத்தின் மீதான தாக்குதல் தடுக்கப்பட்டிருந்தால், ஏனைய தாக்குதல்களையும் தடுத்திருக்க முடியும். தூரதிஷ்டவசமாக, பாதுகாப்புப் படைகள் வன்முறையைக் கட்டுப்படுத்த ஒரு கண்ணீர்ப்புகைக் குண்டைக் கூட பிரயோகிக்கவில்லை. அதே நிலைமை ஏப்ரல் 1st திகதி அன்றும் ஏற்பட்டது. எனினும் அன்று தீவைப்புத் தாக்குதல்கள் எதுவும் இடம்பெறவில்லை, ஆனால் கல் எறிதல் மட்டுமே இருந்தன”



Prof. Channa Jayasumana

“அநுராதபுரம் மாவட்டத்தில், முதியோரின் கண்களை பரிசோதித்து அவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சியொன்றினை நான் நடாத்தினேன். என்னுடன் படித்த சுமார் 1,500 மருத்துவர்களும், வெளிநாட்டில் வசிக்கும் எனது நண்பர்களும் இந்த நலப்பணியில் எனக்கு உதவினார்கள். கடந்த மே 9th திகதி வரையில் நாங்கள் கிட்டத்தட்ட 18,000 ஏழை மக்களுக்கு கண்ணாடிகளை வழங்கியிருந்தோம். அலுவலகத்தில் மேலும் 7,000 மூக்குக்கண்ணாடிகள் மீதமிருந்ததால், மற்றொரு பெரும் எண்ணிக்கையிலான மக்களின் பார்வையைப் பரிசோதித்த பின்னர், பார்வைக்குறைபாடு கொண்டவர்களுக்கு அவை வழங்கப்படவிருந்தன. சுமார் 4 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான அந்த மூக்குக்கண்ணாடிகள் அனைத்தும் அந்தத் தீயில் எரிந்து நாசமானது”

ஐந்து பேர் கொண்ட குடும்பத்தில் மூன்றாவது குழந்தையாகப் பிறந்த பேராசிரியர் சன்ன ஜயசுமன, களுத்துறைக் கல்லூரியில் கல்வி கற்றார். பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற அவர், நாவலப்பிட்டி வைத்தியசாலையில் பயிற்சி பெற்றார். 2016 ஆம் ஆண்டில், அவர் மருந்தியல் (pharmacology)

பேராசிரியரானார். ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் (Rajarata University) சிறுநீரக நோய்கள் (kidney diseases) குறித்து கலாநிதிப்பட்டம் பெற்ற அவர், அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில பல்கலைக்கழகத்தில் (State University of California, USA) கற்கை நெறியொன்றினையும் மேற்கொண்டுள்ளார். ஒரு பல்கலைக்கழக மாணவராக டொக்டர் சன்னா அரசியலில் ஈடுபட்டுள்ளார். பின்னர் 2020 பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து 134,000 அதிவிருப்பு வாக்குகளுடன் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அவர் முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினராக வந்த உடனேயே, சுகாதாரத்திற்கான ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் சுகாதார அமைச்சரானார்.

"எங்கள் குடும்பம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயற்பாட்டாளர்களாக நன்கு அறியப்பட்டவர்கள். எனது தாத்தா ரி.ஜயசுமன (T.Jayasuman) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினராக இருந்தவர். எனது தந்தை விமலசிறி ஜயசுமன (Wimalasiri Jayasiman) மகக்களுக்கு சேவையாற்றும் அரச ஊழியராக இருந்தார். 1980 களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் செயற்பாட்டாளராகவும் இருந்த அவர், அக்கட்சியின் பிரதான பத்திரிகையான 'தினகர' (Dinkara) பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார்"

பேராசிரியர் ஜயசுமனவின் தந்தை மற்றும் ஆசிரியராகத் தொழில் புரிந்த தாயார் யசவதி ஜயசுமன ஆகியோர் இப்போது உயிரோடில்லை. அவரது மூத்த சகோதரர் ஒரு பொறியியலாளராக பணிபுரிகிறார். அவரது இரண்டு சகோதரிகளில் ஒருவர் கணக்காளர், மற்றொருவர் உயர்தர வணிகவியல் ஆசிரியர். பேராசிரியர் ஜயசுமனவின் மனைவி ருச்சி ஜயசுமன (Ruchi Jayasumana) ஒரு இல்லத்தரசி. அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

"இந்த வன்முறையுடன் தொடர்புடைய சில நபர்களையும் குழுக்களையும் சி.சி.டி.வி காட்சிகளிலிருந்து எங்களால் அடையாளம் காண முடிந்தது.

அவர்கள் மாகாண மட்டத்திலான ஜே.வி.பியினதும் எஸ்.ஜே.பி. (ஐக்கிய மக்கள் சக்தி) இனதும் உறுப்பினர்கள், முன்னிலை சோசலிசக் கட்சியுடன் (பேராட்டுகாமி Peratugami) வேலை செய்யும் பல்கலைக்கழக மாணவர்கள், குண்டர்கள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், ரத்தாரத்தா (Ratarata) மற்றும் பிக்கு பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடைய ஐந்து பிக்குகள் மற்றும் ஒரு கத்தோலிக்க பாதிரியார்"

உலகின் எல்லா இடங்களிலும் மார்க்சிச அரசியல் இயக்கங்கள் உயிரிழப்புகளுடனோ அல்லது அவர்களின் அழிவுடனேயே முடிவடைந்துள்ளன.

"இந்த வன்முறை மற்றும் அழிவில் ஈடுபட்டுள்ளவர்கள் மார்க்சிய குழுக்கள். இது அவர்களின் சித்தாந்தத்தில் உள்ள குறைபாடுகளால் ஏற்படுகின்றது. கடந்த 150 ஆண்டுகால உலக வரலாற்றைப் பார்க்கும்போது இது தெளிவாகத் தெரிகின்றது. மார்க்சியம் என்ற பெயரில்தான் அதிக எண்ணிக்கையிலான மரணங்கள் நிகழ்ந்தன.

அந்த எண்ணிக்கை இரண்டு உலகப் போர்களில் இறந்தவர்களை விட அதிகமாகும். 1987–1990 சம்பவங்கள் நிரூபித்தது போல், இலங்கையில் இதில் எந்தவித வித்தியாசமும் இருக்கப்போவதில்லை. மே 9ந் திகதி அன்று நடந்தது அத்தகைய அழிவின் நீட்சியாகும். மார்க்சிய இயக்கங்களைப் பின்பற்றுபவர்கள் சுயவிமர்சனத்தில் ஈடுபட்டு, தமது மார்க்சிச சித்தாந்தத்தைக் கைவிடும்போது இது முடிவுக்கு வரும். மார்க்சியத்தை நம்பி தவறாக வழிநடாத்தப்படுவதால் சில பிக்குகள் அகிம்சை, இரக்கம் மற்றும் அன்பான கருணை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் பௌத்த போதனைகளுக்கு முரணாக, தீ வைப்புத் தாக்குதல்களில் ஈடுபட வழிவகுத்துள்ளது. அத்தகைய பிக்குகளின் ஆடைகளைக் களைய தம்ம சங்காயணத்தை (தம்ம – Dhamma Council சபை) நடத்துவது அவசியம்"

பேராசிரியர் ஜயசுமன ஒரு பல்கலைக்கழக மாணவராகவும் ஆசிரியராகவும் தனது அனுபவத்துடன் இளைய தலைமுறையினருக்கு பேரழிவை மாத்திரமே கொண்டுவரும் ஜே.வி.பி, முன்னிலை சோசலிசக்கட்சி போன்ற மார்க்சிச இயக்கங்களில் ஒருபோதும் இணைய வேண்டாமென ஆலோசனை வழங்குகிறார்,

"நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன். தற்போதைய சூழ்நிலையில் எங்களைப் போன்றவர்கள் இந்த நாட்டில் இனிமேலும் அரசியலில் ஈடுபட இயலாதென்று நான் நினைக்கிறேன். நான் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ததைப் போலவே, பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய்ய வேண்டுமென எனது குடும்பம் விரும்புகின்றது.

எதிர்காலத்தில் நான் அரசியலில் இணைந்தாலோ அல்லது இணையாவிட்டாலோ, எனது அறிவு மற்றும் கல்வியுடன் நாட்டின் நலனுக்காக பணியாற்றுவதை நான் கைவிட மாட்டேன்"

(ஜே.வி.பி மற்றும் ஜே.வி.பியிலிருந்து பிரிந்த முன்னிலை சோசலிசக்கட்சி போன்ற குட்டி முதலாளித்துவ இயக்கங்களை "மார்க்சிச" குழுக்களாக கருதும் போக்கு பலரிடையே காணப்படுகின்றது. அதன் வெளிப்பாடே பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்திருக்கும் கருத்துக்கள். மார்க்சிச இயக்கங்கள் தொடர்பாக அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களுடன் 'வானவில்'லிற்கு துளியளவேனும் உடன்பாடு இல்லாதபோதிலும், அவருடைய ஏனைய கருத்துக்களுடன் கட்டுரையை முழுமையாக மொழிபெயர்த்து வெளியிட வேண்டுமென்ற ஊடகநெறிக்கமைய மார்க்சியம் தொடர்பான அவருடைய கருத்துக்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. – வானவில் ஆசிரியர் குழு)

**மூலம்: Sunday Observer, 03.07.2022**
**தமிழில்: வானவில்**

---

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பிற எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பினர். இந்தப் பிரச்சாரத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் கிஷிமோடோ சடோகோவை மக்கள் வெற்றி பெறச் செய்து மேயராகத் தேர்வு செய்திருக்கிறார்கள். சடோகோவிற்கு 76 ஆயிரத்து 743 வாக்குகள் கிடைத்தன. அதே நகரில் மற்றொரு வார்டுக்கும் தேர்தல் நடைபெற்றது. அதில் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி 25 ஆயிரத்து 181 வாக்குகளைப் பெற்றது.
சட்டமன்றத்தில் வெற்றி டசிகாவா நகர சட்டமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிட்ட ஐந்து இடங்களிலும் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதற்கு முன்பாக எட்டு இடங்களைப் பெற்றிருந்த ஆளும்கட்சி, இரண்டு இடங்களை இழந்து ஆறு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

# போராட்ட நாட்குறிப்பின் கடைசிப் பக்கங்கள் – ஸ்டேன் சுவாமியின் கடிதம்

ஜூலை 2018ல் பத்தல்கடி (Pathalgadi) இயக்கத்தை ஆதரித்தார் என்பதற்காக ஜார்கண்ட் காவல்துறையினர் தேசத்துரோக வழக்குப் பதிந்த பின்னர் பாதிரியார் ஸ்டேன் சுவாமி சிறு குறிப்பொன்றை எழுதினார். பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சியில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், ஹேமந்த் சோரன் தலைமையிலான ஜார்கண்ட் முக்தி மோர்சா அதிகாரத்திற்கு வந்ததும் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டன. ஜூலை 31,2018 அன்று பதிவிடப்பட்ட இந்தக் குறிப்பு எல்கர் பரிசத் வழக்கில் கைதுசெய்யப்பட்ட நிலையில், ஸ்டேன் சுவாமி ஜூலை 6, 2021ல் மரணமடைந்ததையடுத்து மீள் பதிவு செய்யப்படுகிறது.



கடந்த பத்தாண்டுகளாக பழங்குடி மக்களோடும், அவர்களது சுயமரியாதைக்கான போராட்டங்களோடும் என்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளேன். ஒரு எழுத்தாளனாக பிரச்சனைகளை ஆய்வு செய்ய முயன்றிருக்கிறேன். அரசாங்கத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் அதன் கொள்கைகள் குறித்தும் இந்திய அரசியல் சாசனத்தின் துணையோடு என்னுடைய மாற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கிறேன். ஆளும் வர்க்கம் மற்றும் அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் அதன் சட்டபூர்வமான தன்மை, நீதி குறித்தும், செல்லுபடியாகும் தன்மை குறித்தும் கேள்விகளை எழுப்பி இருக்கிறேன்.

பத்தல்கடி பிரச்சினையை பொறுத்தமட்டில் ஆதிவாசிகளை ஏன் இப்படி செய்கிறார்கள்? என்று நான் கேள்வி எழுப்பி இருக்கிறேன். என்னை பொறுத்தவரை சகிப்புத்தன்மைக்கு அப்பால் அவர்கள் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாகி இருக்கிறார்கள். அவர்களுடைய மண்ணில் எடுக்கப்பட்ட தாதுக்கள் அன்னியர்களை பணக்காரர்களாக ஆக்கியிருப்பதோடு, அந்த மண்ணின் மைந்தர்களை சாகும் அளவுக்கு கோரமான வறுமைக்குள் தள்ளி இருக்கிறது. அங்கே உற்பத்தியான பொருட்களில் அவர்களுக்கென்று எந்தப் பங்கும் கிடையாது. அவர்களுடைய நலன்களுக்காக உருவாக்கப்படுகின்ற சட்டங்களும் கொள்கைகளும் பெரும்பாலும் அலட்சியத்தின் காரணமாக நடைமுறைக்கு வருவதில்லை. இதற்கு மேல் சகித்துக் கொள்ள முடியாது என்கிற மனநிலைக்கு வந்த பின்னர் அவர்கள் தங்களுடைய அடையாளங்களை மீண்டும் உறுதி செய்து கொள்வதற்காக பத்தல்கடியின் மூலம் கிராமசபைகளை பலப்படுத்தும் வேலைகளை செய்கிறார்கள். அவர்களுடைய செயல்கள் புரிந்து கொள்ள தக்கவைதான்.

**நான் எழுப்பியுள்ள சில கேள்விகள்**

1) பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டுமே உள்ளடக்கிய ஒரு பழங்குடியினர் ஆலோசனைக்குழு (TAC), மாநிலத்தில் பாதுகாப்பிற்காகவும், பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நற்சூழல் என சகலத்தையும் குறித்து ஆளுநருக்கு ஆலோசனை வழங்கும் என்று தெளிவாகக் கூறும் அரசியல் அமைப்பின் ஐந்தாவது அட்டவணை பிரிவு 244(1) ஏன் அமல்படுத்தப்படவில்லை என்று கேள்வி எழுப்பியிருக்கிறேன். பழங்குடியின மக்களின் நலனை மனதில் வைத்து, பழங்குடியின மக்களின் அரசியல் அமைப்பு பாதுகாவலரான ஆளுநர் சொந்தமாக சட்டங்களையும் உருவாக்கவும் பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றம் இயற்றிய எந்த சட்டத்தையும் இரத்து செய்யலாம். உண்மை என்னவென்றால், ஒன்றிய அரசுடன் இணக்கமாக செயல்பட வேண்டும் என்ற காரணத்தை முன்வைத்து, கடந்த ஏழு தசாப்தங்களில் எந்த ஒரு மாநில ஆளுநரும் அரசியலமைப்பு சட்டம் அளித்திருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி பழங்குடி இன மக்களை நெருங்க முயற்சி செய்யவில்லை. எப்போதேனும் நடைபெறும் பழங்குடியின ஆலோசனை குழுவின் கூட்டம், மாநில முதல்வரால் ஒருங்கிணைக்கப்பட்டு ஆளும் கட்சியினரால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆக, பழங்குடியினர் பாதுகாப்பு குழு என்பது பல்லில்லாத பாம்பாக மாற்றப்பட்டிருக்கிறது. இது கண்டிப்பாக பழங்குடியின மக்களுக்கு எதிரான அரசியல் சாசன மோசடி.

2) ஆதிவாசி சமூகங்கள் கிராம சபையின் மூலம் தன்னாட்சி செய்வதற்கான செழுமையான சமூக கலாச்சார பாரம்பரியத்தை கொண்டிருக்கிறது என்பதை முதன் முறையாக அங்கீகரித்த 1996 ஆம் ஆண்டு பஞ்சாயத்து சட்டம் திட்டவட்டமாக புறக்கணிக்கப்பட்டது குறித்து நான் கேள்விகளை எழுப்பி இருக்கிறேன். 9 மாநிலங்களிலும் இந்த

சட்டம் உள்நோக்கத்தோடு நடைமுறைக்கு வராமல் பார்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதன் பொருள் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் பழங்குடியின மக்கள் தன்னாட்சி பெறுவதை விரும்பவில்லை என்றாகிறது.

3) பட்டியல்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பழங்குடியின சமூகங்களுக்கு மிகப் பெரிய ஆறுதலாக வந்த உச்சநீதிமன்றத்தின் சமதா தீர்ப்பை குறித்து அரசாங்கம் அமைதி காப்பது குறித்து நான் கேள்வி எழுப்பினேன். உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், சந்தை மயமாக்கல், தனியார்மயமாக்கல் உள்ளிட்ட கொள்கைகளின் விளைவாக தேசிய, சர்வதேச கார்ப்பரேட் நிறுவனங்கள் மத்திய இந்தியாவின் பழங்குடியினர் பகுதிகளில் தாதுக்களை தோண்டி எடுப்பதற்கு ஆக்கிரமிக்க தொடங்கியிருந்த காலத்தில் அந்த தீர்ப்பு வந்தது. அரசு எந்திரம் அந்த நிறுவனங்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்கியது. பழங்குடியின மக்களிடம் இருந்து வந்த எதிர்ப்புகள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டன. தங்களுடைய நிலத்தில் தாதுக்களை தோண்டி எடுக்கும் பொழுது அதை கட்டுக்குள் வைத்திருக்கவும், தங்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்திக் கொள்ளவும் சில குறிப்பிடத்தக்க பாதுகாப்பு அம்சங்களை அந்த தீர்ப்பு தன்னகத்தே கொண்டிருந்தது. எதார்த்தத்தில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மாநிலம் புறம் தள்ளியது. பாதிக்கப்பட்ட சமூகங்கள் பல்வேறு வழக்குகளை தொடர்ந்தன, ஆனாலும் , பழங்குடியின மக்களை தங்களது சொந்த நிலத்திலிருந்து அன்னியப்படுத்தி, வளமான தாதுக்களை திருடுவதற்கு, காலனிய கால 'அரசு உயர் உரிமை' (law of eminent domain) சட்டங்கள் கை கொள்ளப்பட்டன.

4) 2006ஆம் ஆண்டு வன உரிமைச் சட்டம் தொடர்பாக அரசின் அரை மனது நடவடிக்கைகள் குறித்து நான் கேள்வி எழுப்பினேன். நீர், காற்று, நிலம் இவைதான் பழங்குடியின மக்களின் வாழ்க்கையின் அடிப்படைக் கூறு என்பதை நாம் அறிவோம். அவர்களது பாரம்பரிய உரிமைகள் மீது திட்டமிட்ட வகையில் பல பத்தாண்டுகளாகத் அத்துமீறல்கள் நிகழ்ந்திருக்கின்றன. நீண்ட காலத்திற்குப் பிறகு ஒரு வரலாற்று ரீதியான அநீதி பழங்குடியினருக்கும் மற்றும் காடு வாழ் மக்களுக்கும் இருக்கின்றன என்பதை உணர்ந்து, அதை சரிசெய்ய இந்த சட்டத்தை அரசு இயற்றியது.

எதார்த்தத்தில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மாநிலம் புறம் தள்ளியது. பாதிக்கப்பட்ட சமூகங்கள் பல்வேறு வழக்குகளை தொடர்ந்தன, ஆனாலும், பழங்குடியின மக்களை தங்களது சொந்த நிலத்திலிருந்து அன்னியப்படுத்தி, வளமான தாதுக்களை திருடுவதற்கு, காலனிய கால 'அரசு உயர் உரிமை' சட்டங்கள் கை கொள்ளப்பட்டன.

5) எதார்த்தம் விருப்பத்திற்கு அப்பால் இருக்கிறது. 2006லிருந்து 2011 வரையிலும் 30 இலட்சம் பேர் சொத்துரிமை கோரி விண்ணப்பங்கள் அனுப்பினர். அவற்றில் இதுவரையிலும் 11 இலட்சம் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு 14 இலட்சம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் 5 இலட்சம் விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன. தற்போது ஜார்கண்ட் அரசாங்கம் கிராம சபைகளை குறுக்கு வழியில் புறக்கணித்து வன நிலங்களை ஆக்கிரமித்து தொழிற்சாலைகளை அமைக்க முயல்கிறது.

6) நீதிமன்றம் தொடர்பில் இருப்பதாலேயே ஒருவர் குற்றவாளி என்கிற சிந்தனையை நிராகரித்திருந்தது. "வன்முறையில் ஈடுபடாத, மக்களை வன்முறைக்கு தூண்டாத, பொது ஒழுங்குக்கு குந்தகம் விளைவிக்காத வரை ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக இருப்பது மட்டும் ஒருவரை கிரிமினல் ஆக்காது" என்ற உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் ஏன் கடைபிடிக்கப்படுவதில்லை என நான் கேள்வி எழுப்பினேன்.

ஏராளமான ஆண்களும் பெண்களும் நக்சலைட் உங்களுக்கு உதவி செய்கிறார்கள் என்கிற சந்தேகத்தின் பெயரில் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்ததுதான். அவர்களை கைது செய்தபின்னர் கூடுதலான பிரிவுகளை அவர்கள்மீது சுமத்துகிறார்கள். காவல்துறையினர் சிறைபிடிக்க விரும்புகிற எவர் மீதும் இலகுவாக குத்துவதற்கு ஏதுவான முத்திரை இது. அதற்கு எந்த ஆதாரமோ, சாட்சியோ தேவையில்லை. தடை செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக இருந்தாலும் ஒரு நபர் கிரிமினல் ஆக மாட்டார் என்று உச்சநீதிமன்றம் கூறுகிறது. சட்டம் ஒழுங்கை நிலை படுத்த வேண்டிய சக்திகள் நீதிபரிபாலன அமைப்புகளில் இருந்து எவ்வளவு தொலைவில் இருக்கிறார்கள்?

7) பழங்குடியின மக்களுக்கு சாவு மணியாக மாறக்கூடிய ஜார்க்கண்ட் அரசு கொண்டு வந்த 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டம் குறித்து நான் கேள்வி எழுப்பினேன். பாதிக்கப்பட்ட மக்களின் சுற்றுச் சூழல், சமூக உறவுகள் மற்றும் கலாச்சார விழுமியங்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட சமூகத் தாக்க மதிப்பீட்டு தேவையை இது நீக்குகிறது. மிகவும் சேதம் தரத்தக்க அம்சம் என்னவென்றால் எந்த விவசாய நிலத்தையும் விவசாயம் சாராத நோக்கங்களுக்காக அரசால் தர முடியும். எனவே அனைத்தையும் இதில் இணைக்க முடியும்.

8) பழங்குடியின மக்களை அழித்தொழிக்கும் திட்டம் என்று நான் கருதிய நில வங்கி தொடர்பாக நான் கேள்வி எழுப்பினேன். 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 'Momentum Jharkhand' நிகழ்ச்சியில் இருபத்தொரு இலட்சம் ஏக்கர் நில வங்கியில் இருப்பதாகவும், பத்து இலட்சம் ஏக்கர் தொழிலதிபர்களுக்கு ஒதுக்குவதற்கு தயாராக இருப்பதாகவும் சொல்லப்பட்டது.

சாகுபடி செய்யப்படாத நிலம் ("Gair-majurwa") அது தனிப்பட்ட ('khas') நபருக்குரியதாகவோ அல்லது பொதுவானதாகவோ ('aam') இருக்கலாம். பாரம்பரிய முறைப்படி தனிப்பட்ட பழங்குடியின குடும்பங்களும் அல்லது சமூகங்களோ இந்த நிலத்தை தங்கள் கட்டுப்பாட்டில் (jamabandi) வைத்து பயன்படுத்துவார்கள்.

அதிர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக அரசாங்கம் இந்த உரிமைகள் (jamabandi) அனைத்தையும் ரத்து செய்து சாகுபடி செய்யப்படாத நிலங்கள் அனைத்தும் அரசாங்கத்திற்கு சொந்தம் என்று கூறுகிறது. அதை சிறிய ஆலைகளுக்கோ அல்லது பெரிய ஆலைகளுக்கோ சுதந்திரமாக கொடுக்க முடியும் என்று அறிவிக்கிறது.

**மக்களுக்காக வாழ்வை அர்பணித்த பழங்குடியின உரிமைகள் போராளி ஸ்டேன் சுவாமி கைது செய்யப்பட்டது முதல் அவர் உயிரிழந்தது வரையிலான நிகழ்வுகளின் தொகுப்பு:**

**2020 :**

ஒக்ரோபர் 8: ஜார்க்கண்டில் 83 வயதான, பழங்குடியின செயற்பாட்டளர் ஸ்டேன் சுவாமி கைது. தேசிய புலனாய்வு முகமையினாரால் கைது செய்யப்பட்டு மகாராஷ்டிராவில் உள்ள தலோஜா சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒக்ரோபர் 22: ஸ்டேன் சுவாமிக்கு பல்வேறு உடல்நிலை கோளாறுகள் இருந்த நிலையில், மருத்துவ காரணங்களின் அடிப்படையில் ஜாமீன் (Medical Bail) கோரி தேசிய புலனாய்வு முகாமை (என்.ஐ.ஏ) சிறப்பு நீதிமன்றத்தில் மனு.

ஒக்ரோபர் 23: ஸ்டேன் சுவாமியின் உடல்நிலை கருத்தில் கொள்ளப்படாமல் மருத்துவ காரணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனு நிராகரிப்பு.

நவம்பர் 7: பார்க்கின்சன் (நடுக்கவாதம்) நோயால் அவதிப்படும் சாமி, தண்ணீர் குவளையை பிடிக்க முடியவில்லை என்பதால், ஸ்ட்ரோ (உறிஞ்சு குழல்) மற்றும் சிப்பர் (தண்ணீர் பாட்டில்) கோரி நீதிமன்றத்தில் மனு.

நவம்பர் 26: ஸ்டேன் சுவாமிக்கு வழங்க, உறிஞ்சு குழல் மற்றும் சிப்பர் இல்லை என என்.ஐ.ஏ நீதிமன்றத்தில் பதில்.

நவம்பர் 29: ஸ்டேன் சுவாமிக்கு ஸ்ட்ரோ மற்றும் சிப்பர் வழங்குவதாக, சிறை அதிகாரிகள் ஒப்புதல்.

டிசம்பர் 4: ஸ்ட்ரா சிப்பர் மற்றும் குளிர்காலத்துக்கு தேவையான உடைகளை ஸ்டேன் சுவாமி பெற்றார்.

**2021:**

ஜனவரி 24: பீமா கோரேகான் செயற்பாட்டாளர்களை விடுதலை செய்ய வேண்டும் என, ஐ.நாவின் மனித உரிமை அமைப்பு அறிக்கை.

ஜனவரி 25: தேசிய மனித உரிமை அமைப்புகளின் கூட்டமைப்பு, ஸ்டேன் சுவாமிக்கு முகுந்தன் சி மேனன் விருதை வழங்கியது.

ஜனவரி 30: மாவோயிஸ்டுகளின் இலட்சியத்தை நிறைவெற்ற போராடிக் கொண்டிருக்கும் ஸ்டேன் சுவாமியின் ஜாமீன் மனுவை நிராகரிக்க வேண்டும் என என்.ஐ.ஏ மனு.

மார்ச் 22: என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம் ஸ்டேன் சுவாமியின் ஜாமீன் மனுவை நிராகரித்தது.

ஏப்ரல் 26: சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து, ஸ்டேன் சுவாமி மும்பை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு.

மே 5 – மே 15 ஆம் தேதிக்குள், ஸ்டேன் சுவாமியின் மருத்துவ ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என மகாராஷ்ட்ரா அரசுக்கு மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவு.

மே 13: கொரோனா தொற்று கடுமையாக பரவி வரும் சூழலில் பீமா கோரேகான் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிறையில் இருப்பவர்களை விடுவிக்கக் கோரி மகராஷ்ட்ரா முதல்வருக்கு கடிதம்.

மே 18: ஸ்டேன் சுவாமியை விடுதலை செய்ய வேண்டும் என ஜேசூட் பாதிரியார்கள் மகாராஷ்ட்ரா உள்துறை அமைச்சருக்கு கடிதம்.

மே 21: ஸ்டான் சாமியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லச் சிறை நிர்வாகத்துக்கு மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவு.

மே 21: என்னால் எழுத முடியவில்லை, நடக்க முடியவில்லை, சாப்பிட கூட முடியவில்லை என இடைக்கால ஜாமீன் கோரி ஸ்டேன் சுவாமி மனு தாக்கல்.

மே 28: மும்பை தலோஜா சிறையில் இருந்து ஸ்டேன் சுவாமி ஹோலி ஃபேமிலி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மே 30: ஸ்டேன் சுவாமிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஜூன் 17: உடல்நிலை மிக கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதால் ஸ்டேன் சுவாமி மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் என மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜூலை 3: உபா சட்டத்தில் பிணை மறுக்கப்படுவது அரசியல் சாசன உரிமைக்கு எதிரானது என ஸ்டேன் சுவாமி வழக்கு தொடர்ந்தார்.

ஜூலை 4: ஸ்டேன் சுவாமிக்கு செயற்கை சுவாசம் கொடுக்கப்பட்டது.

ஜூலை 5: மதியம் 1.30 மணியளவில் ஸ்டேன் சுவாமி மரணமடைந்தார்.

# இரண்டு வேளை உணவுக்கு திண்டாடும் நடுத்தர மக்கள்

தொழிலாளர்களும், ஏழைகளும் கடும் நெருக்கடியில் உழன்று கொண்டிருக்கையில், பாகிஸ்தானின் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் இரண்டு வேளை உணவுக்குத் திண்டாடும் அவல நிலை உருவாகியுள்ளது என்று பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள தேசிய ஊடக மையத்தில் இடது மாற்று மாநாடு நடைபெற்றது. இதில் பாகிஸ்தானில் உள்ள 16 இடதுசாரிக் கட்சிகள் பங்கேற்றன. மாநாட்டில் பேசிய பிரதிநிதிகள், பாகிஸ்தானில் சமூகப் பொருளாதார நிலை சீரழிந்து வருவது குறித்து கவலை தெரிவித்தனர். இந்த மோசமான நிலைக்கு நாட்டின் சிவில் மற்றும் இராணுவத் தலைமையே காரணம் என்று குற்றம் சாட்டிய அவர்கள், நாட்டின் நீதித்துறை மற்றும் முதலாளிகள் இந்தத் தலைமையுடன் இணைந்து செயல்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.

மாநாட்டில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் இம்தாத் காஜி (Imdad Qazi), “நாட்டின் ஆட்சியாளர்கள் ஏழைகள் மீது சுமையை ஏற்றிவிட்டு, எக்கச்சக்கமாகப் பொருள் செலவு செய்து வருகிறார்கள். நாட்டின் பொருளாதார நிலை படுமோசமாக இருப்பதைப் பற்றியும் அவர்கள் கவலைப்படுவதில்லை. ஜனாதிபதியில் இருந்து ஆளுநர்கள் வரையிலும், பிரதமரில் இருந்து முதல்வர்கள் வரையிலும், கீழ் மட்டத்தில் சிவில் மற்றும் ராணுவ அதிகாரிகள் வரையில் ஊதியத்தில் பெரும் வெட்டை ஏற்படுத்த வேண்டும். ஐ.எம்.எப் போடும் நிபந்தனைகளைத் தவிர்த்து விட்டு, வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை நோக்கி நாட்டை

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க…**

# இராணுவச் செலவினம்: உலகளவில் இந்தியா 3 ஆம் இடம், 5வது இடத்தில் ரஷ்யா – ஆய்வறிக்கை தகவல்

இராணுவத்துக்கான செலவுகளை மேற்கொள்வதில் உலகிலேயே இந்தியா மூன்றாவது இடத்தில் இருக்கிறது என ஓர் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோமை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சர்வதேச அமைதி ஆய்வு மையம் (STOCKHOLM INTERNATIONAL PEACE RESEARCH INSTITUTE - SIPRI) சார்பில் மேற்கொள்ளப்பட்ட அறிக்கையில், கடந்த 2021–ஆம் ஆண்டு நிலவரப்படி உலகின் இராணுவச் செலவுகள் 2.1 ட்ரில்லியன் டொலர் அளவை எட்டியுள்ளது. இது, இதுவரை கண்டிராத உச்சபட்ச செலவு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021–ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகில் இராணுவத்துகாக அதிகமாக செலவு செய்த நாடுகளில் அமெரிக்கா முதலிடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன. 4 மற்றும் 5–ஆம் இடங்களை முறையே பிரிட்டனும், ரஷ்யாவும் பிடித்துள்ளன. இந்த ஐந்து நாடுகளும் சேர்ந்த உலகின் ஒட்டுமொத்த இராணுவ செலவினங்களில் 68 சதவீதத்தை உள்ளடக்கியுள்ளன.

கொரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையின் போதும்கூட உலகளவில் இராணுவத்திற்கான செலவு, வரலாற்று சாதனை படைத்துள்ளதாக, அந்த தனியார் ஆய்வு மையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் டொக்டர் டியாகோ லோபெஸ் (Dr Diego Lopes) தெரிவித்துள்ளார். மேலும், உலகளவில் பணவீக்கப் பிரச்சினையால் பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்த போதும் கூட, இராணுவத்திற்கான செலவு 6.1 சதவீதம் அதிகரித்துள்ளது என்றார்.

**Top 10 countries list and ranking in military spending 2021**

| Rank | Country | Spending in US$ Billion | % of GDP | % of Global Spending |
|---|---|---|---|---|
| 1 | Unites States | 801 | 3.5 | 38% |
| 2 | China | 293 | 1.7 | 14% |
| 3 | INDIA | 76.6 | 2.7 | 3.60% |
| 4 | United Kingdom | 68.4 | 2.2 | 3.20% |
| 5 | Russia | 65.9 | 4.1 | 3.10% |
| 6 | France | 56.6 | 1.9 | 2.70% |
| 7 | Germany | 56 | 1.3 | 2.70% |
| 8 | Saudi Arebia | 55.5 | 6.6 | 2.60% |
| 9 | Japan | 54.1 | 1.1 | 2.60% |
| 10 | South Korea | 50.2 | 2.8 | 2.40% |

2020–இல் இராணுவத்துக்கான செலவு உலக ஜிடிபியில் 2.2 சதவீதமாக இருந்த நிலையில், 2021–இல் இராணுவத்துக்கான செலவு உலக ஜி.டி.பியில் 2.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

நாடுகள் வாரியாகப் பார்த்தால், அமெரிக்கா 2021–இல் 801 பில்லியன் அமெரிக்க டொலர்களை இராணுவ மேம்பாட்டுக்காக செலவு செய்துள்ளது. அதுவும் குறிப்பாக இராணுவ ஆராய்ச்சி, மேம்பாட்டுக்கு மட்டும் 24 சதவீதம் செலவு செய்துள்ளது. ஆயுத கொள்முதலுக்கான நிதி ஒதுக்கீடு 6.4 சதவீதம் ஆகக் குறைந்துள்ளது.

சீனா இதே காலக்கட்டத்தில் 293 பில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்துள்ளது. இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.7 சதவீதம் அதிகம்.

மூன்றாவது இடத்தில் உள்ள இந்தியா 76.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவு செய்துள்ளது. 2020–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்தியா இராணுவத்துக்கான செலவை 0.9 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியா உள்நாட்டு இராணுவத் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் பலப்படுத்தும் விதமாக 2021 இராணுவ பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் 64 சதவீதத்தை உள்நாட்டு இராணுவ தயாரிப்புகளை வாங்க செலவழித்துள்ளது.

# வரலாறு காணாத வெப்ப அலை: ஸ்பெயினில் 1,000 பேர் பலி

**ஸ்**பெயினில் இந்த ஆண்டில் ஏற்பட்ட இரண்டாவது வெப்ப அலையில் இதுவரையில் 1,047 பேர் இறந்ததாக ஸ்பெயினின் சுகாதார அமைச்சகம் 21.07.2022 அன்று தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக ஐரோப்பிய நாடுகள் வரலாறு காணாத அளவுக்கு கடும் வெப்ப அலையை எதிர்கொண்டுள்ளன. இந்நிலையில் ஸ்பெயின் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்ச அளவாக வெப்பநிலை 40 டிகிரி செல்சியசை தாண்டியது.

இதுதொடர்பாக, ஸ்பெயினில் வானிலை ஆய்வு மையத்தின் செய்தித்தொடர்பாளர் ஹெர்வெல்லா கூறியதாவது, கடந்த 10 நாள்களில் (ஜூலை 10~20) நாட்டின் பல பகுதிகளில் இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் தாண்டியதால், இந்த ஆண்டு இரண்டாவது வெப்ப அலையில் 1,047 பேர் இறந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 672 பேர் 85 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள், 241 பேர் 75 முதல் 84 வயதுக்குட்பட்டவர்கள், 88 பேர் 65 முதல் 74 வயதுக்கு இடைப்பட்டவர்கள் ஆவர். வெப்பம் அலைக்கு சுவாசம் மற்றும் இதய நோய்கள் உள்ளவர்களே அதிகளவில் இறந்துள்ளனர். இளைஞர்களிடையே முழுமையாக எந்தவித பாதிப்பும் காணப்படவில்லை. ஆனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலும் வயதானவர்களே எனக் கூறினார்.

இது ஸ்பெயினில் இந்தாண்டில் ஏற்பட்ட 2ஆவது பெரிய வெப்ப அலையாக கருதப்படுகிறது. முதல் வெப்ப அலை கடந்த மாதம் 11 ஆம் தேதி தொடங்கி ஒரு வாரம் நீடித்தது. இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் தாண்டியதால் 829 பேர் உயிரிழந்துள்ளனர்.

# பொலிவியா பொருளாதாரத்தில் முன்னேற்றம்

**இ**டதுசாரிகள் தலைமையிலான அரசாங்கம் பொலிவியாவில் அமைக்கப்பட்ட பிறகு அந்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியைக் கண்டதோடு, விலைவாசியும் நிலையானதாக மாறியிருக்கிறது. 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி இவோ மொரேல்ஸ் (Evo Morelas) ஆதரவு பெற்ற இடதுசாரி வேட்பாளர் லூயிஸ் அர்ஸ் (Luis Arce) வெற்றி பெற்றார். அதற்கு முன்பு சட்டவிரோதமாக ஆட்சியைக் கைப்பற்றியிருந்த அமெரிக்க ஆதரவு பெற்ற ஆட்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்து வைத்திருந்தனர். கொரோனா பாதிப்பையும் மீறி மக்கள் நலக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி பொருளாதாரத்தை சரி செய்வதில் இடதுசாரிகள் வெற்றி பெற்றுள்ளனர். செய்தியாளர்களைச் சந்தித்த பொலிவியாவின் திட்டத்துறை அமைச்சர் செர்ஜியோ கியுசிகான்கி, “எங்கள் நாடு பொருளாதாரத்தில் ஏற்றத்தைக் கண்டு வருகிறது. விலைவாசியை நிலையாக வைத்திருப்பதில் வெற்றி கண்டுள்ளோம். பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வேலையின்மையைக் குறைத்திருக்கிறோம். உலகம் முழுவதும் நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. அரசின் பல்வேறு நடவடிக்கைகளே இந்த வெற்றிக்குக் காரணம்” என்றார்.

வேலையின்மையைக் கட்டுக்குள் கொண்டு வருவதில் சமூக உற்பத்தி மாதிரித் திட்டம் பெரும் பலனைத் தந்துள்ளது. கடந்த ஆண்டை விட 4.2 விழுக்காடு அளவிற்கு வேலையின்மை குறைக்கப்பட்டது. ஜூலை 2020ல் வேலையின்மை 11.6 விழுக்காடாக இருந்தது. ஒரு ஆண்டுக்குப் பிறகு, இது 7.4 விழுக்காடாகக் குறைந்தது. வலதுசாரிகளின் மக்கள் விரோதக் கொள்கைகளை திரும்பப் பெற்ற இடதுசாரிகள் மக்களின் மீதிருந்த சுமையைக் குறைத்திருக்கிறார்கள். இடதுசாரிகளால் கொண்டு வரப்பட்ட “வறுமைக்கு எதிரான உறுதிச்சீட்டு” என்ற திட்டம் வறுமை ஒழிப்பிலும் பெரும் பங்கை ஆற்றியுள்ளது. பொது முதலீடுகளால் உருவாக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் வேலைகளை உருவாக்கியது. இவோ மொரேல்ஸ் ஜனாதிபதியாக இருந்தபோது இந்தத் திட்டங்கள் நடைமுறையில் இருந்தன. ஆனால், சட்டவிரோதமாக ஆட்சியைக் கைப்பற்றிய வலதுசாரிகள் இந்தத் திட்டங்களை நீக்கியிருந்தனர். வேலையின்மை அதிகரித்தது. தற்போது திட்டங்கள் மீண்டும் கொண்டு வரப்பட்டதால் வேலைகள் உருவாகியுள்ளன.

# கொலம்பியாவின் புதிய அமைச்சரவையில் பழங்குடியினத்தவருக்கு பொறுப்புகள்

**கொ**லம்பியாவின் புதிய அமைச்சரவையில் மூன்று பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகப் பொறுப்பேற்கவிருக்கிறார்கள்.

ஜூன் 19 ஆம் தேதியன்று நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்ற இடதுசாரி வேட்பாளர் குஸ்தவோ பெட்ரோ, (Gustavo Petro) ஓகஸ்டு 7 ஆம் திகதியன்று பொறுப்பேற்கவுள்ளார். அவரது அமைச்சரவையில் யார், யார் இடம் பெறப் போகிறார்கள் என்ற விபரங்கள் வெளியாகி வருகின்றன. அர்ஹூவாகோ, நாசா மற்றும் எம்பெரா என்ற மூன்று பழங்குடியினத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாகிறார்கள்.

மாக்டலீனா என்ற பழங்குடிப் பகுதியைச் சேர்ந்த அர்ஹூவாகோ பிரிவைச் சேர்ந்தவரின் பதவியேற்பு, மிகவும் வறிய மற்றும் பின்தங்கிய நிலையில் உள்ள பழங்குடியினரின் பல பிரிவினருக்கு உத்வேகத்தை அளிக்கும் நிகழ்வாக இருக்கப் போகிறது. அந்தப் பழங்குடியினத்தைச் சேர்ந்த லியோனார் ஜலபடா டாரெஸ், ஐக்கிய நாடுகள் அவைக்கு கொலம்பியாவின் தூதுவராகப் பொறுப்பேற்கப் போகிறார். இவர் அரசியல்வாதி மற்றும் எழுத்தாளர் என்பதைத் தாண்டி, பழங்குடி மக்களின் உரிமைக்கான போராளி என்ற அடையாளத்தையும் கொண்டுள்ளார்.

நாசா பழங்குடியினத்தைச் சேர்ந்த சமூகவியல் வல்லுநரான கியோவானி யுலே, நில மீட்புக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்கப் போகிறார். இவர்களைப் போன்றே, எம்பெரா பழங்குடியினத்தைச் சேர்ந்த மரியா பேட்ரிசியா டோபோன் பாதிக்கப்பட்டவர்கள் பிரிவுக்கான தலைவராகப் பொறுப்பேற்கிறார். மேலும் பல்வேறு பழங்குடியினத் தலைவர்கள் மிக முக்கியமான பொறுப்புகளில் இடம் பெறப் போகிறார்கள்.

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

நடைபோடச் செய்ய வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

மேலும் பேசிய பலர், “பொதுவாக, நாட்டின் தொழிலாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் மோசமாகி வரும் நிலைமையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வருத்தத்திற்குரிய வகையில், நடுத்தர வர்க்க மக்கள் கூட ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவுக்கு சிரமப்படுகிறார்கள்” என்றனர். இந்த மோசமான மற்றும் நம்பிக்கையிழக்கச் செய்யும் சூழலிலிருந்து விடுதலை பெற மாற்றுத் தளத்தில் மக்களை ஒன்றுபட்டு நிற்கச் செய்ய வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தனர். மாநாட்டின் நிறைவில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதோடு, தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஒற்றுமையை இடதுசாரிக் கூட்டணி என்ற இலக்கிற்கு எடுத்துச் செல்ல ஐந்து உறுப்பினர்கள் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த கூட்டத்திற்குள், அவரவர் கட்சிகளின் உயர்மட்டக்குழு ஒப்புதலைப் பெற்று வர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. கூட்டணியின் பெயர் மற்றும் நிர்வாக அமைப்பு ஆகியவற்றை அடுத்த மாநாட்டில் தீர்மானிக்கவிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் உருவாகிய பின்னர், 1948 மார்ச் 6 அன்று இந்தியாவின் கல்கத்தாவில் பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. அக்காலகட்டத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 2வது மாநாட்டில், புதிய அரசான பாகிஸ்தானிற்கென தனிக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.


# சஜித் அணியின் திட்டம் தவிடுபொடியானது!

**இ**லங்கையில் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பிர்கள் மத்தியில் யூலை 20 ஆம் திகதி நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் தானும் போட்டியிடப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச முதலில் அறிவித்திருந்தார். பின்னர் தான் போட்டியிடவில்லை எனத் தெரிவித்துவிட்டு, பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அதிருப்தியாளர் டலஸ் அழகப்பெருமவுக்கு தனது கட்சி ஆதரவளிக்கும் எனத் தெரிவித்து அவ்வாறே செய்தார். இருந்தும் டலஸ் 82 வாக்குகள் மட்டும் பெற்று படுமோசமாக ரணில் விக்கிரமசிங்கவிடம் தோற்றுப் போனார். ரணில் 134 வாக்குகள் பெற்று வெற்றியீட்டினார்.

சஜித் போட்டியிடாமல் பின்வாங்கியதற்கு முக்கியமான சில காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம், தானும் போட்டியிட்டால் அது மும்முனைப் போட்டியாக மாறி தான் நிச்சயம் தோற்றுப் போவேன் என்பது சஜித்திற்கு தெரியும்.

எனவே, அவர் 2015 ஜனாதிபதி தேர்தலின் போது ஐ.தே.கவுடன் இணைந்து சந்திரிகா மேற்கொண்டது போன்ற ஒரு சதித் திட்டத்தை அரங்கேற்ற எண்ணினார். 2015 ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக ரணில் போட்டியிட்டிருந்தால் நிச்சயம் தோற்றிருப்பார். எனவே, ஐ.தே.கவும் சந்திரிகவும் மைத்திரிபால சிறிசேனவை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரித்தெடுத்து பொது வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெற்றனர். ரணில் செய்த உபகாரத்துக்கு பரிசாக மைத்திரிபால சிறிசேனவால் அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

அதேபோல, இம்முறை நடைபெற்ற ஜனாதிபதி தெரிவின் போதும் சஜித் அணியால் திட்டமிடப்பட்டது. அதாவது, தான் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டு, டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளித்தால் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுடன் தனது கட்சி உறுப்பினர்களும் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், மனோ




கணேசன் அணி, சிறீ.ல.சு.கட்சி, ரவூப் ஹக்கீம் அணி, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார எல்லோரும் இணைந்து டலசை வெற்றிபெற வைக்கலாம் என கணக்குப் போட்டார். டலஸ் வெற்றி பெற உதவுவதற்கு கைம்மாறாக தனக்கு பிரதமர் பதவி வழங்க வேண்டும் என்பது சஜித்தின் நிபந்தனை. அதை டலசும் நிச்சயம் ஏற்றுக் கொண்டிருப்பார்.

ஆனால், ஜனாதிபதியாகும் டலசின் கீழ் அதிகாரமற்ற பொம்மை பிரதமராக மட்டும் இருப்பதை சஜித் ஒருபோதும் விரும்பியிருக்கமாட்டார். அதனால் அவருக்கு தனது எதிர்காலம் குறித்து இரண்டு திட்டங்கள் இருந்ததாக இப்பொழுது அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

***பரிமாணன்***

அதில் ஒன்று, 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டு வந்து ஜனாதிபதியை விட பிரதமருக்கான அதிகாரத்தை அதிகரித்து தன்னை வல்லமை மிகுந்தவராக ஆக்குவது.

இரண்டாவது, டலஸ் அதற்கு உடன்பட மறுத்தால், கோத்தாவுக்கு எதிராக கிளர்ச்சி நடத்தி அவரை ஜனாதிபதி பதவியை விட்டுத் துரத்திவிட்டு ரணில் ஜனாதிபதி ஆகியது போல, டலசுக்கு எதிராகவும் கிளர்ச்சியைத் தூண்டி, அவரையும் ஜனாதிபதி பதவியை விட்டுத் துரத்திவிட்டு, பிரதமராக இருக்கும் தான் தற்போதைய அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியாக வருவது.

சஜித் போட்ட இந்த நயவஞ்சக திட்டத்தை உணர்ந்துதான் சஜித் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டால் அவரை ஆதரிக்க எண்ணியிருந்த சம்பந்தன், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் கோஸ்டிகள் பின்னர் சஜித் கை காட்டிய டலசுக்கு ஆதரவளிக்க முன் வந்தனர். இல்லாவிடின் அவர்கள் ஒருபோதும் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த டலசுக்கு வாக்களித்திருக்க மாட்டார்கள். ஆனால் இவர்கள் எல்லோரும் தலையால் மண் கிண்டியும் டலஸ் பரிதாபகரமாக தோற்றுப் போனார்.

இப்பொழுது அரசியல் வட்டாரங்களில் நிலவும் தகவல்களின்படி, தமது எதிர்காலப் பாதுகாப்பின் நிமித்தம் ரணிலை வெற்றிபெற வைப்பதற்காக முன்னாள் அரச தலைவர்களான கோத்தபாய, மகிந்த மற்றும் பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் பொதுஜன பெரமுனவின் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தனித்தனியாகத் தொடர்பு கொண்டு ரணிலுக்கு வாக்களிக்கும்படி கோரியதாகத் தெரிய வருகிறது. அதன் மூலமே நாட்டில் ஏற்படவிருந்த ஒரு பெரிய அரசியல் பேரழிவு தடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

மூலம் அவர் ஐ.தே.கவின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றுக் கொண்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. அடைந்த படுதோல்வியை வைத்துக் கணக்கிட்ட பலர் இனிமேல் ஐ.தே.கவுக்கும் ரணிலுக்கும் எதிர்காலம் இல்லை என்ற முடிவுக்கே வந்திருந்தனர். ஆனால் வரலாறு அதிசயிக்கத்தக்க முறையில் எதிர் திசையில் சென்றுள்ளது.

அதாவது, யாரும் எதிர்பார்க்காத வகையில் முதலில் பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில், இப்பொழுது அதிகப்படியான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ஆகி இருக்கிறார். கடந்த பொதுத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட வெல்ல முடியாத ஒரு கட்சியின் தலைவர் நாட்டின் அதியுயர் பதவியான ஜனாதிபதி பதவியை அடைந்திருக்கிறார் என்றால், இதை அதிசயம் என்பதா அல்லது பலரும் சொல்வது போல விதி என்று சொல்வதா? ரணிலுக்கு இந்த அதிர்ஸ்டம் எவ்வாறு வாய்த்தது?

இலங்கையில் அதிகாத்தில் இருந்த ராஜபக்சாக்களின் அரசாங்கம் மேற்குலக சக்திகளுக்கு இசைவானதாக செயல்படவில்லை. அதே நேரத்தில் மேற்குலகின் (இந்தியாவினதும்) பரம வைரியான சீனாவுடன் நெருங்கிய நட்புறவுகளைப் பேண ஆரம்பித்தது. அதனால் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என அவர்கள் விரும்பினர். (2015 இல் ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து இவ்வாறான மாற்றமொன்றை ஏற்படுத்திய போதிலும் பின்னர் நடந்த தேர்தல்களில் அவர்கள் தோல்வியடைந்திருந்தனர்)

முன்னைய அனுபவங்களைக் கணக்கிட்ட அவர்கள், தேர்தல்கள் மூலம் ராஜபக்சாக்களை வீழ்த்த முடியாது என்பதை நன்றாக உணர்ந்திருந்தனர். எனவே, வேறு வழிமுறைகளைக் கைக்கொண்டு ராஜபக்சாக்களை வீழ்த்துவதற்கு அவர்கள் தருணம் பார்த்துக் காத்திருந்தனர். அதற்கான பொருத்தமான சூழலும் உருவானது.

கொவிட் தொற்றால் இலங்கையின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, டொலர் கையிருப்பு வற்றிப் போனது. அதனால் அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருள், மருந்து வகைகளை இறக்குமதி செய்ய முடியாத சூழல் தோன்றி அரசுக்கெதிரான மக்கள் எதிர்ப்பை உருவாக்கியது. இந்தச் சூழ்நிலையில் கோத்தபாய அரசு மேற்கொண்ட சில புத்திசாலித்தனமற்ற (உர இறக்குமதிக்குத் தடை, கொவிட் தொற்றால் இறந்த முஸ்லிம்களின் உடல்களை அவர்களது மத சம்பிரதாயத்தை மீறி எரித்தமை போன்ற) நடவடிக்கைகள் நிலைமையை மேலும் மோசமாக்கியது. இன்னொரு பக்கத்தில் ரஸ்ய – உக்ரைன் மோதலும், அதன் காரணமாக ரஸ்யா மீது மேற்குலகம் விதித்த பொருளாதாரத் தடைகளும் எரியிற நெருப்பில் எண்ணெயை ஊற்றி விட்டன.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சாக்களின் குடும்பங்கள் நாட்டைக் கொள்ளையடித்ததும், சர்வாதிகார ஆட்சி நடத்துவதும், சீனாவினால் ஏற்பட்ட கடன் சுமையும்தான் காரணங்கள் என்ற பிரச்சாரத்தை முதலாளித்துவ ஊடகங்கள் பெருமெடுப்பில் பிரச்சாரம் செய்தன. அந்தப் பிரச்சாரத்துக்கு மேற்கத்தைய ஊடகங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தன.

இந்தச் சூழ்நிலையில்தான் "ராஜபக்சாக்கள் பதவி விலக வேண்டும்" என்ற கோசத்துடன் சில குழுக்கள் கொழும்பு காலிமுகத் திடலில் நிரந்தரமாகத் தங்கி போராட்டத்தை நடத்த ஆரம்பித்தனர். இந்தப் போராட்டத்துக்கு இடதுசாரி போர்வையுடன் செயல்படும் ஜே.வி.பி. அதிலிருந்து பிரிந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சி என்பன பின்னணியிலிருந்து ஆதரவு கொடுத்தனர். அவர்கள் மட்டுமின்றி, சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க, மனோ கணேசன் போன்றவர்களும் பகிரங்க ஆதரவு வழங்கினர்.

அது மட்டுமல்லாமல், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காலிமுகத் திடலில் கூடாரங்கள் அமைத்து உல்லாச வாழ்வு வாழ்வதற்காக மேற்குலக சக்திகள் கோடிக்கணக்கில் நிதியுதவியும் வழங்கினர். ஆரவும் வழங்கினர். (போராட்டம் உக்கிரமடைந்திருந்த வேளையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசநாயக்கவை தேடிச் சென்று சந்தித்து, புகைப்படமும் எடுத்தார் என்றால், இந்தப் போராட்டத்தில் உந்துவிசையாக யார் யாரெல்லாம் இருந்திருக்கிறார்கள் என்பதை ஊகிக்க முடியும்)

போராட்டக்காரர்கள் கொடுத்த நெருக்கடி காரணமாக முதலில் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ச பதவி விலகினார். அவரது பதவி விலகல் ரணிலுக்கு பிரதமர் பதவியைப் பெற்றுக் கொடுத்தது. பின்னர் கோத்தபாயவும் ஜனாதிபதி பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேறினார். அவரது பதவி விலகல் அரசியல் சாசன அடிப்படையில் ரணிலுக்கு இப்பொழுது ஜனாதிபதி பதவியைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இலங்கையின் படு பிற்போக்கான வலதுசாரிக்கட்சியும், அமெரிக்காவின் நீண்ட கால விசுவாசக் கட்சியுமான ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எவ்விதமான தேர்தல்களிலும் போட்டியிட்டு மக்களின் ஆதரவைப் பெறாமல் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், இலங்கையின் ஜனநாயகம் அற்ற அரசியல் அமைப்பாலும் குறுக்கு வழியில் ஜனாதிபதி ஆகி இருக்கிறார்.

மறுபக்கத்தில் 69 இலட்சம் மக்களின் நேரடி ஆதரவைப் பெற்று ஜனாதிபதியாக வந்த கோத்தபாய ராஜபக்சவும், பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று அரசாங்கம் அமைத்து பிரதமர் பதவி வகித்த மகிந்த ராஜபக்சவும் ஆட்சி செய்ய விடாது 'போராட்டம்' என்ற பெயரில் துரத்தப்பட்டிருக்கிறார்கள். இதுதான் இலங்கையில் ஜனநாயகத்தின் தற்போதைய நிலை.

ஆனால், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஆட்சியில் இருந்த தனிநபர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல என்பதை விரைவில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியும் நிரூபிக்கும். அப்பொழுது இந்த காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களும், அவர்களது சர்வதேச எஜமானர்களும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

நாட்டு மக்கள்தான் பாவம்!

# மூக்குடைந்து நிற்கிறது அமெரிக்கா

உக்ரைன் மீது போர் நடவடிக்கையை ரஷ்யா எடுத்ததால், அந்நாட்டைத் தனிமைப்படுத்துவதற்காக அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் அறிவித்த பொருளாதார மற்றும் வர்த்தகத் தடைகள் அனைத்தும் பெரும் தோல்வியைத் தழுவியுள்ளன. ராய்ட்டர்ஸ் ஊடகக்குழுமத்தின் ஆய்வு ஒன்றில், “மேற்கத்திய நாடுகள் போட்டுள்ள தடைகளை மீறி, பல்வேறு நாடுகள் ரஷ்யாவிடமிருந்து வாங்கும் கச்சா எண்ணெய் அளவை அதிகப்படுத்தியுள்ளன'' என்று தெரிய வந்துள்ளது. இதனால் தடைகள் மூலமாக ரஷ்யாவைக் கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் முயற்சி தோல்வியடைந்திருக்கிறது. அந்நாட்டின் எண்ணெய் வர்த்தகம் சரிவடைவதற்குப் பதிலாக பெரும் அளவில் அதிகரித்துள்ளது. இந்தியா, சீனா, ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை அதிகரித்துள்ளன.

அனைவரின் புருவத்தையும் உயர்த்தச் செய்த நிகழ்வு என்னவென்றால், உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான சவூதி அரேபியா, ரஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்து வந்த அளவை இரட்டிப்பாக்கியது. தனது மின்னுற்பத்தி மையங்களின் தேவையை நிறைவேற்றவே இதைச் செய்திருக்கிறார்கள். 2022 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையில் 6 இலட்சத்து 47 ஆயிரம் தொன் எடையுள்ள (ஒரு நாளைக்கு 48 ஆயிரம் பீப்பாய்கள் அளவுக்கு) எண்ணெய்யை சவூதி அரேபியா இறக்குமதி செய்துள்ளது. இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டில் வாங்கியதை விட 3 இலட்சத்து 20 ஆயிரம் தொன்கள் அதிகமாகும்.

இதன்மூலம் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் சவூதி அரேபியாவை முந்திக்கொண்டு முதலிடத்தை ரஷ்யா பிடித்துள்ளது. பிரேசிலும் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கத் தயாராகி வருகிறது. ஐரோப்பிய நாடுகளின் எரிவாயுத் தேவையில் 40 விழுக்காட்டை ரஷ்யாதான் நிறைவேற்றி




வந்தது. தற்போது அமெரிக்காவின் தூண்டுதலால் எரிவாயுவை வாங்காமல் இருப்பதால், பல ஐரோப்பிய நாடுகள் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன. குளிர் காலத்திற்கு இன்னும் சில மாதங்களே உள்ளதால், பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்ற குரல்கள் வலுவாக எழுந்து வருகின்றன. தோல்வியடைந்ததைத் தாங்க முடியாமல், ஐரோப்பிய ஆணையத்தை அமெரிக்கா தூண்டி விட்டிருக்கிறது. தடைகளைத் தாண்ட முயல்பவர்களுக்கான அனைத்து வழிகளையும் அடையுங்கள் என்று ஐரோப்பிய ஆணையம் மூலமாக அமெரிக்கா ஆணை யிட்டுள்ளது. தடைகளை மீறுபவர்களுக்கு தண்டனை வழங்க ஐரோப்பிய ஒன்றிய நிர்வாகம் திட்டமிட்டு வருகிறது. எத்தகைய தண்டனைகள் வழங்கப்படும் என்பது குறித்த ஒருமித்த கருத்து உறுப்பு நாடுகளுக்குள் வந்தவுடன், அது வெளியிடப்படும். புதிய தடைகளை ஏற்படுத்தவில்லை. ஜி–7 மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தவே இந்த ஏற்பாடுகள் என்றும் கூறியுள்ளனர்.

## பொருளாதாரப் போர்

இன்றைய உலகில் போர் என்பது ஆயுதங்களை பயன்படுத்துவது மட்டுமல்ல, பொருளாதாரப் போர்/ தகவல் போர் ஆகியவையும் திணிக்கப்படுகின்றன. ரஷ்யா மீது வரலாறு காணாத வர்த்தக தடைகளும் அரசியல் தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன. ரஷ்யாவின் சுமார் 600 பில்லியன் டொலர்கள் நிதியை மேற்கத்திய நாடுகள் முடக்கியுள்ளன. ரஷ்ய நிறுவனங்கள் உலகம் முழுவதும் வங்கி முறையை பயன்படுத்த இயலாத அளவுக்கு தடைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. ஏராளமான நுகர்வுப் பொருள் நிறுவனங்கள் ரஷ்யாவை விட்டு வெளியேறிவிட்டன. ஆனால் இவை ரஷ்யாவை பாதிக்காது. ஏனெனில் சீன/இந்திய நிறுவனங்கள் இந்த இடத்தை நிரப்ப முடியும்.

அதே சமயத்தில் அமெரிக்காவின் டொலருக்கு முதல் முறையாக பெரிய சவால் எழுந்துள்ளது. சீனாவும் ரஷ்யாவும் டொலருக்கு மாற்றாக ரூபிள்~யுவான் நாணயங்களை பயன்படுத்த முடிவு செய்துள்ளன. சவூதி அரேபியா ஐக்கிய அரபு அமீரகம் போன்ற தேசங்களும் டொலரை மட்டும் நம்பியிருக்காமல், ரூபிள் அல்லது யுவான் பக்கம் சாய தொடங்கியுள்ளன. அமெரிக்காவின் மிரட்டலையும் மீறி இந்தியா ரஷ்யாவின் எண்ணெய்யை ரூபாய் – ரூபிள் மூலம் வாங்க முடிவு செய்துள்ளது. இவையெல்லாம் எதிர்காலத்தில் டொலரின் ஆதிக்கத்தை சிதைக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த பொருளாதாரப் போரில் ரஷ்யா பாதிக்கப்படும் என்றாலும், மேற்கத்திய நாடுகளே அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றன.